181

REGISTERED No. M. 6165. அறு 2

# பத்ஹுல் இஸ்லாம்

# FATH-HUL-ISLAM

மாத பத்திரிகை

181/4-56

அக்டோபர் 1956.


| விஷயம். | பக்கம். |
| --- | --- |
| நானிலத்தில் சிறந்த நல்வழி காட்டி நபி (ஸல்) ... | 1 |
| சன்மார்க்க மனப்பான்மை வேண்டும் (T. F. R. மஆலி ஸாஹிப்-பாகவி) ... ... | 8 |
| அனைத அஷ்ரப் (கெ. மு. கவுஸ்) ... ... ... | 13 |
| சிறைப் பறவை சிப்கத்துல்லா அல்லது துப்பு துலக்கிய தூயவர் ... ... ... ... ... | 19 |
| நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் குர்ஆனின் நல்லுபதேசமும் ... ... ... ... ... ... | 25 |
| திருக்குர்ஆன் சாரசங்கிரஹம் (ரஹ்மத் பாகவி) ... ... ... ... ... ... | 29 |


...ல் இஸ்லாம் ஆபீஸ் :
...றரோட், திருவல்லிக்கேணி,
மதறாஸ் 5.

JL
Q7ಣ211, N24 FI
182056

# பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு

| | | |
|---|---|---|
| வருஷ சந்தா | ரூ. | 1–8–0 |
| தனிப் பிரதி | அணா. | 0–2–0 |

மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா ரூ. 2–0–0

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.


வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

திருக் குர்ஆனின் தமிழ் தப்ஸீர்

## தப்ஸீறுல் ஹமீத் பீ
## தப்ஸீரில் குர்ஆனில் மஜீத்

(நான்காம் பாகம்)

ஸூரத்துல் இஸ்ராஉ முதல் ஸூரத்து நூர் முடிய 8-ஸூராக்களின் தப்ஸீர் நான்காம் பாகமாக வெளிவந்திருக்கிறது. இது ராயல் 8-பேஜ் சைஸில் 868-பக்கங்கள் கொண்டது. கிளேஸ் காகிதத்தில் அச்சிட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டது. விலை ரூ. 10

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

الاسلام

# பத்ஹுல் இஸ்லாம்

அக்டோபர்—1956.

## நானிலத்தில் சிறந்த நல்வழி காட்டி நபி (ஸல்)

சர்வலோக தயாபரனும் பக்தரக்ஷகனும் அருளாளனுமாகிய அல்லாஹு தஆலா, தன் தூயதிருமறையாகிய திருக்குர்ஆனில் திருவுளமாகின்றான்:—

"நிச்சயமாக உங்களுக்கு, ரஸூலுல்லாஹ்வினிடம் (சன்மார்க்க வழி காட்டும்) நேர்த்தியான முன்மாதிரி (உஸ்வயே ஹஸனு) உண்டாயிருக்கிறது. ஆண்டவனை நம்பி, இறுதித்தீர்ப்பு நாளில் நம்பிக்கை வைப்பவர்க்கு இது (பிரயோஜனம் தரும்)"

உலகமும் உலக மக்களும் சுபிக்ஷமடைவதற்கு, உலகத்தலைவர்களால், இக்காலை உலகெங்கும் நல்ல திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. பஞ்சசீலம் என்றும், ஐந்தாண்டு திட்டம் என்றும், வழி முறைகள் வகுக்கப்பட்டு வருகின்றன.

எந்தப் பழக்க வழக்கங்களைப் பின் பற்றி நடந்தால் மக்கள் க்ஷேமமும் சௌக்கியமும் ஆத்ம சாந்தியும் அடைவர் என்று ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது. மக்கள் போராட்டங்களை ஒழித்து, பொறுமையை மேற்கொண்டு, சாத்வீக வழிகளைப் பின்

பற்றி நடக்து கொண்டால்தான் உலகம் சுபிக்ஷமடையும் என்று ஒரு சாரார் சொல்லி வருகின்றனர்.

இன்னொரு சாரார், பொருளாதாரக் கட்டுப்பாட்டால் தான் உலகம் முன்னேறும்—உலக மக்கள் சுபிக்ஷ மடைவர் என்று கூறி வருகின்றனர். மற்றொரு சாரார், பொது உடைமைக் கொள்கையை நாடெங்கும் அனுஷ்டித்து சமத்துவத்தையும் பரஸ்பர ஒத்துழைப்பையும் கட்டுப்பாடாக நிலை நாட்டினால்தான், உலக மக்கள் கதி மோக்ஷம் அடைவர் என்று வாதப் பிரதிவாதமும் வழிமுறையும் வகுத்து வருகின்றனர்.

இதைத் தெளிவாய் கூற வேண்டுமானால்: பணக்கார அமெரிக்கா ஒரு வழியில் செல்கிறது; சோவியத் ரஷ்யா ஒரு வழியில் செல்கிறது; ஏழை சீனா ஜப்பான் ஒரு வழியில் செல்கின்றன. முதலாளித்துவ மனப்பான்மை கொண்ட பிரஞ்சு, பிரிட்டிஷ், ஜெர்மனி ராஜ்யங்கள் ஒரு வழியில் செல்லுகின்றன. இதையெல்லாம் விட்டு நம் பாரத தேசமும், பாகிஸ்தானமும் வேறு வழியில் செல்கின்றன.

நாடும் நாட்டு மக்களும் நலிந்துப்போகாமல் நல்ல முறையில் வாழவேண்டு மென்று, ஒவ்வொரு நாட்டாரும் ஒவ்வொரு திறத்தாரும், தத்தம் அறிவாற்றலுக்கேற்ப வழிகளை வகுத்துக்கொண்டு, அனுஷ்டித்துப் பார்த்து வருகின்றனர்.

இன்றைய உலகில் எங்கும் அமைதியைக்காணோம். ஒவ்வொரு நாட்டிலும் ஏதேனும் சங்கடமான நிலைமை இல்லாமலில்லை; பொருளாதாரக் கஷ்டங்கள் ஒரு பக்கல் இருக்கட்டும். வாழ்க்கை முறையில், ஜீவிய லக்ஷியத்தில், நித்திய கர்மானுஷ்டத்தில் மனிதன் எப்படி வாழ வேண்டும்—எப்படி வாழ்ந்தால், ஜீவியத்தில் சாந்தியும் ஆத்மாவுக்கு விசிராந்தியும் ஏற்படுமென்று இதுகாறும், மேனாட்டாரும், கீழ் நாட்டாரும் தனிப்பட ஒரு திட்டம் வகுத்துக்காட்டவில்லை; செயல் முறை வகுத்துங் கூறவில்லை.

மனிதன் காலையில் எழுந்த உடன் என்ன செய்ய வேண்டும், பகல் நேரத்தில் என்ன அனுஷ்டிக்க வேண்டும், மாலையில் என்ன சாதிக்க வேண்டும், எப்படி உண்ண வேண்டும், எங்ஙனம் உறங்க வேண்டும், எங்ஙனம் பருக வேண்டும், எங்ஙனம் இல்லறம் நடத்த வேண்டும்—என்பன போன்ற முக்கியமான விஷயங்களில் ஆத்

18056

மார்த்த அடிப்படையின் மீது எந்தத் தலைவரும், எந்த அரசாங்கமும் ஏகோபித்த முறையில் உலக மக்களுக்கெல்லாம் ஏற்றவகையில் ஏகமான திட்டம் வகுத்துத் தரவில்லை.

ஆனால், இன்றைக்கு சுமார் 1400 ஆண்டுகளுக்கு முன், அரேபிய தேசத்தில், மணற்பாங்கான பாலைவன காட்டில், நாகரிகமே இன்னதென் றறியாது மாக்கள் போல் மக்கள் வாழ்ந்த அரபு காட்டில், ஆண்டவனின் திருத்தூதராய் அவதரித்த முஹம்மத் (ஸல்) என்னும் ஒரு தீர்க்கதரிசி, இந்த சர்வலோக மகாப் பிரச்னையை தீர்த்து வைத்துள்ளார்கள். அந்த மகான் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள், அரபு நாடு மட்டுமில்லை உலக மன்பதைகள் எல்லோருமே இலௌகிகத் துறையிலும், ஆத்மார்த்த முறையிலும் பிறந்த நாள் முதல் இறக்கும் நாள்வரை மனிதன் என்னென்ன நினைக்க வேண்டும், என்னென்ன புரிய வேண்டும், என்னென்ன சாதிக்க வேண்டும் என்ற மகாப்பெரும் லக்ஷியத்தை, சுலபமான வழிகளில் சாத்தியமான திட்டங்களில் வகுத்து அனுஷ்டித்துக் காட்டிச் சென்றுள்ளார்கள்.

அந்த மகாப்பெரும் ஸ்கீம் என்ன? திட்டம் யாது? வழிமுறையாது? அதுவே 'இஸ்லாம்' என்னும் திருப்பெயரால் அழைக்கப்படும் சாந்தி மயமான சன்மார்க்கமாகும்.

இஸ்லாமிய ஷரீஅத் என்னும் சன்மார்க்கத்தில், மனித சமூகம் என்றைக்கும் எக்காலத்துக்கும் எந்நாட்டுக்கும் இசைந்த முறையில் எப்படி வாழவேண்டும் என்ற அனுஷ்டான திட்டம் வகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. அதன் பெயர்தான் ஷரீஅத் ஆகும்.

இஸ்லாமிய ஷரீஅத்தில்-எல்லாத் திட்டங்களும் வகுக்கப்பட்டு எல்லாப் பிரச்னைகளும் தீர்க்கப்பட்டிருக்கின்றன. உண்பது, உடுப்பது, இருப்பது, உறங்குவது, இல்லறம் புரிவது, தொழில் செய்வது, வாணிபம் நடத்துவது, பரஸ்பரம் பழகுவது, அரசியல் விவகாரம் நடத்துவது, போர் தொடுப்பது, சமாதானம் அனுஷ்டிப்பது, வழக்கு விவகாரங்களைத் தீர்ப்பது, வாழ்க்கையின் நலன்-இடர்களைப் பகுத்து உணர்வது, சீதோஷ்ண நிலையை ஆராய்வது, வான கோளங்களான சூரிய-சந்திர-நட்சத்திரங்களின் இயங்குதல்களை அறிவது-முதலிய எல்லா விஷயங்களைப் பற்றியும் இஸ்லாமிய ஷரீஅத்தில்

சர்ச்சை செய்யப்பட்டு, வழி முறை வகுக்கப்பட்டு, திட்டங்கள் தீட்டப்பட் டுள்ளன.

அந்த காலத்துக்கும் சரியே, இந்த காலத்துக்கும் சரியே, எந்த காலத்துக்கும் சரியே, ஏற்றமைந்த இங்கிதமான சிறந்த வழிப் பண்பு முறை, இஸ்லாமிய ஷரீஅத்தில் எடுத்தாளப்பட்டிருக்கின்றன.

இதனை, எல்லாம் வல்ல அல்லாஹு தஆலா, தன்னுடைய அருட் பாக்கியமாக, மாந்தர்க்கோடிக்கு, தன்னுடைய தூயதிருத் தூதர் மூலம் அருள் பாலித்துள்ளான். அந்தத் திருத்தூதர் நபி (ஸல்) அவர்கள், வாய்மூலம் சொல்லித் தீர்த்து கடமை முடிந்து விட்டதென்று இருந்து விடாமல், தங்கள் நித்தியச் செயல் மூலமும், நிர்ணயம் வாயிலாகவும், அனுஷ்டான ரீதியாகவும் அமல் செய்து காட்டிச் சென்றுள்ளார்கள்.

'உஸ்வயே ஹஸனு' என்ற அழகிய சொல்லில் அந்தக் கருத்து அடங்கி யிருக்கிறது. 'கேர்த்தியான முன்மாதிரி' என்பது அதன் கருத்து. எல்லாம் வல்ல அல்லாஹு தஆலா, நபிகள் நாயகம் முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களை, சர்வ லோகத்துக்கும் சர்வகாலத்துக்கும் என்று அழகிய நமூனவாக, அதாவது மனிதர் குலத்துக்கு இணையிலா வழிகாட்டியாக அனுப்பி யுள்ளான்.

"சொல்வது யார்க்கும் எளிது, அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்"

என்பது திருக் குறளாராகிய திருவள்ளுவன் வாக்கு. இதையொரு ஹிந்துப் பெரியார் சொல்லியிருந்தாலும், இதை ஏற்றுக்கொள்வது அறிவுடையார் ஒவ்வொருவரின் கடமையாகும்.

"வாய்க்கு வந்தவண்ணம் சொல்லித் தீர்த்து விடுவது எல்லோராலும் இயலும் எளிய காரியம்தான்; ஆனல் சொன்ன பிரகாரம் செய்து காட்டுவ தென்பது இலேசான காரியமில்லை" என்பது அந்த ஈரடிப் பாட்டின் உட்பொருள்.

இந்த அரிய காரியத்தை நமது நபிகள் நாயகம் முஹம்மத் (ஸல்) அவர்கள், அனுபவபூர்வமாக செய்து காட்டினர்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஆண்டவனுடைய திருத்தூதரா யிருந்ததால், எந்த ஒரு பிரச்னையும் தம் சொந்த கருத்துப்படி முடிவு

செய்து தீர்த்துவிட மாட்டார்கள். ஆண்டவனிடமிருந்து தமக்கு கட்டளை வரும்வரை-அதாவது திடமான ஞானோதயம் உண்டாகும் வரை—காத்திருப்பார்கள். அப்படி, நிச்சயமான முறையில்தான் நாயகம் (ஸல்) அவர்கள், இஸ்லாமிய ஷரீஅத் சம்பந்தமான எல்லா விஷயங்களையும், மஸ்அலா அனைத்தையும் எடுத்தோதினார்கள்.

நபிகள் நாயகம் முஹம்மத் (ஸல்) அவர்கள், சொல்லிய வண்ணம் நல்ல காரியங்களைச் செய்து காட்டி, "நீங்களும் இம்மாதிரியே அனுஷ்டானம் புரிந்து நன்மை அடையுங்கள்" என்று இதோபதேசமும் செய்பவர்களாய் இருந்தார்கள். எனவே, மகான் முஹம்மத் நபி (ஸல்) அவர்களை "திருக் குர்ஆனின் சொரூபம்" என்றும் சொல்வது உண்டு.

திருக்குர்ஆன், அல்லாஹ்வின் கட்டளைகளும் நற்போதனைகளும் அனுஷ்டான விதிகளும் நிறைந்த திருவேத வாக்கிய சேகரமாகும். மகான் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள், இந்த குர்ஆன் திருமறையை, ஒரு புத்தகக் கட்டாக கொண்டு வந்து கொடுத்துவிடவில்லை; குர்ஆனின் ஒவ்வொரு வாக்கியத்தையும் மக்களுக்கு ஓதிக் காட்டி, உட்கருத்தை விளக்கி, 'இந்த விதமாகவே நானும் செய்கிறேன்; நீங்களும் செய்யுங்கள்' என்று போதித்து, பரஸ்பரம் நடந்து, செய்து அனுஷ்டித்துக் காட்டுவார்கள். எனவே முஹம்மத் நபி (ஸல்) அவர்கள், உயிருடனுள்ள குர்ஆனாகவே இருந்து வந்தார்கள்.

இத்தலையங்கத்தின் தலைப்பிலுள்ள திருவாக்கியத்தின் கருத்துரையை மீண்டும் ஆழ்ந்து படித்துப்பாருங்கள்: "ஆண்டவனிடம் விசுவாசம் வைத்து இறுதித்தீர்ப்பு நாளைப்பற்றி அஞ்சி, நல்ல முஸ்லிம்களாய் திகழும் நல்லோர்க்கு, நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களிடம் 'உஸ்வயே ஹஸனா' என்னும் அழகிய நமூனா உண்டாயிருக்கிறது" என்று அதில் எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது. இது ஆண்டவன் தன் அடியார்களுக்கு அருட் புரிந்த அரும்பெரும் பாக்கியம் என்பதில் சந்தேகமில்லை.

"இதுதான் சந்திரகிரிக்குப் போகும் வழி" என்று சொல்லி போகச் சொல்லிவிடுவது எளிதுதான். வழிநடந்து பழக்கமில்லாத ஒருவனுக்கு 'இந்த வழியே நீபோ' என்று சொல்லிவிடுவதை விட, "நண்பனே, இதுதான் அந்த ஊர்பாதை; நானும் அந்த ஊரை

நோக்கித்தான் போகிறேன்; நீயும் என்னை பின்பற்றி என்னுடன் வந்தால் நீயும் அந்த ஊரை அடைந்து இன்புறுவாய் 'வா' என்னுடன்" என்று அந்த மகா வழிகாட்டி, வழிபோக்கரை அழைத்துச் சென்றூர் என்ருல், அவரைப்போல் பரோபகாரி வேறு யார் இருக்க முடியும்?

இந்த உதாரணம், நமது நபிகள் நாயகம் முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுக்கு முற்றும் பொருத்தமானதாய் இருக்கிறது. 'உதாரண புருஷர்' 'சன்மார்க்க வழிகாட்டி.' 'சத்போதகர்' 'நல்லாசான்' என்றெல்லாம் நாம் அஹ்மத் நபி (ஸல்) அவர்களைப் போற்றிப் புகழ கடமைப்பட்டிருக்கின்ருேம். அவர்கள் மீது ஸலவாத் கூறவும் கடமைப்பட்டுள்ளோம்.

வஅத்தீ வுல்லாஹ வஅத்தீஉர் ரஸூல. "ஆண்டவனுக்கு வழிப்பட்டு நடவுங்கள்; திருத்தூதருக்கும் வழிப்பட்டு நடவுங்கள்" என்ற வாக்கியக் கருத்தை ஓர்ந்து பாருங்கள். ஒருவன், "நான் திருநபியின் சொல்லுக்கு வழிப்பட மாட்டேன், ஆண்டவன் சொல்லுக்கு மட்டுமே வழிப்படுவேன்" என்று சொல்லி ஹடம் செய்தால், அவன் ஒருபோதும் நேர்வழி என்னும் ஹிதாயத்தை அடைந்தவனுக மாட்டான். ஆனல் ஒருவன் "நான் திருத்தூதர் நபி முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு வழிபட்டு நடப்பேன்" என்று சொல்லி ஒழுகிக் கொண்டால், நிச்சயமாக அவன், ஆண்டவனுடைய சொல்லுக்கும் இணங்கி வழிப்பட்டவனுகின்ருன்.

இதை 'ஸுன்னத்தே நபவீ' என்று சொல்கிருேம். சுன்னத்தான காரியங்களில் பர்லான காரியங்களும் அடங்கி யிருக்கின்றன. 'இஸ்லாம்' என்பதை நாம் சுன்னத்தின் சாயலாகவே காணுகின்ருேம். ஹதீதுகளுக்கு 'ஸுன்னத்' என்னும் பெயர் உண்டு. ஹதீதுகளில் குர்ஆனின் போதனைகளும் அடங்கி யிருக்கின்றன.

"கிலாபே பயம்பர் கஸே ரஹ் குஸீது
கே ஹர்கிஸ் பமன்ஜில் நகாஹத் ரஸீது"

என்பது பாரசீகக்கவி. இதன் கருத்து "யாரேனும் திரு நபி (ஸல்) அவர்களுக்கு மாறுபாடான வழிகளில் செல்வானுனல், அவன் ஒருபோதும் லக்ஷியமாகிய மன்ஜிலில் (ஒதுங்கும் தலத்திற்) போய்ச் சேரமாட்டான்" என்பதாகும். 'சுன்னத்தே முஹம்மதீ' என்னும் இஸ்லாமிய ஷரீஅத்துக்கு மாருன வழிகளில்—துன்மார்க்கங்களில்

செல்வோர் ஒருபோதும், ஜீவிய லக்ஷியத்தையும் ஆத்ம சாந்தியையும் முக்திப் பேற்றையும் அடைய முடியாது.

அதுமட்டுமல்ல; இந்த உலகத்தில், இக்காலே, காணப்படும் பிரச்னைகளுக்கும் வித்தியாசங்களுக்கும் அமைதியின்மைகளுக்கும் போராட்டங்களுக்கும், ஒரே பரிகாரம் பரிசுத்த இஸ்லாத்தின் போதனைகளேயாகும். இக்கால உலகத்தின் பல அரசாங்கங்களில், முஸ்லிம் ராஜ்யமாயினும் சரி முஸ்லிமல்லாத ராஜ்யங்களாயினும் சரி. அமைதியாயும் சாந்திமயமாயும் சமாதான லக்ஷியமாயும் வாழ வேண்டுமாயின் இஸ்லாமே அதற்குப் பரிகாரம்.

அடுத்த ரபீவுல் அவ்வல் மீ 12-ம் நாள் புனித நாள்; யவ்முல் மீலாத்! அன்று முதல் நாம் கொண்டாடப் போகும் மீலாது சபைகளிலும் திருநபி ஜயந்திக் கொண்டாட்டங்களிலும், இந்த லக்ஷியத்தை நாம் உலகத்தாருக் கெல்லாம் எடுத்து போதிப்போமாக! வாழ்க இஸ்லாம்; வாழ்க திருநபிநாமம்.

---


## ஸீரத்துல் பாறூக்

இதாகிறது நமது நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய இரண்டாவது கலிபாவாகிய உமர் இப்னுல் கத்தாபு றழியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சரித்திரம்.

இதில் அவர்களுடைய பிரபல்யங்களும், கீர்த்திகளும் வீரியங்களும், யுத்த சாமர்த்தியங்களும், தீனில் வழுவாது நடக்கும் நீதிகளும் அடங்கி யிருக்கின்றன. எல்லா முஸ்லிம்களுக்கும் அவர்களுடைய மகிமை புலப்பட்டிருப்பதால் நாமதை இங்கு விரித்தெழுதவில்லை. இச்சரித்திரம் வாசிக்க வாசிக்க ஆனந்தத்தையும் ஆச்சரியத்தையும் உண்டாக்குமென்பதில் ஐயமில்லை. இது இரண்டு பாகமாகும். முதல் பாகத்தில் அவர்களுடைய சரித்திரங்களும் இரண்டாம் பாகத்தில் அவர்களுடைய நீதிகளும் அடங்கி யிருக்கின்றன.

இரண்டு பாகமும் சேர்ந்தது விலை ரூ. 3

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

# சன்மார்க்க மனப்பான்மை வேண்டும்,

டி. எப். ஆர். மஆலி ஸாஹிப் (பாகவி)

உலகத்தில் இக்காலே, நாஸ்திகமும் விதண்டாவாதமும் மதப் பற்றின்மையும், சூருவளிக்காற்று போல் எங்கும் அழிவை உண்டாக்கி வருகின்றன. பொதுப்படையாய் மனித சமூகத்துடைய உள்ளங்களி லிருந்தும் மூளேகளிலிருந்தும், நல்லதை கிரகிக்கும் நல்ல சக்தி குறைந்து கொண்டே வருகிறது.

உலகத்தில் ஜனத்தொகை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே தான் போகிறது. ஆனுல் அதற்கேற்ப உலகில் மதப்பற்றும் சன்மார்க்க மனப்பான்மையுமுள்ள பக்தகோடிகளின் தொகை பெருக வில்லே. பெருகுவது ஒருபக்க மிருக்கட்டும், நாளுக்கு நாள் அத் தொகை குறைந்து கொண்டே. தான் போகிறது.

தெய்வ நம்பிக்கை, சன்மார்க்கப்பற்று, நற்குண நல்லொழுக்கம், பரஸ்பர விஸ்வாசம் முதலிய நல்ல அம்சங்கள், மனித சுபாவங்களி லிருந்து இக்காலே அற்று அழிந்து, இல்லாமலாகிக் கொண்டு வருகிறது.

இந்தியாவில் மட்டுமல்ல, பொதுவாக உலகத்தின் எல்லா நாடுகளிலும், குறிப்பாக ஐரோப்பா, அமெரிக்கா, ரஷ்யா போன்ற முற்போக்கு நாடுகளிலுமே, மக்களிடையே இத்தகைய நிரீசுவரவாதமும், மதப்பற்றில்லாத தான்ருேன்றித்தன்மையும் தாண்டவமாடிக் கொண்டிருக்கின்றன. இன்றைய உலகத்து மனித சமுதாயத்தினிடமிருந்து, மதபக்தி ஒழுக்காசாரம் என்னும் சூரியனே அஸ்தமித்துப்போய் விட்டது என்று யாரேனும் சொன்னுலும் அது பொருந்தும்.

ஒரு விஷயத்தில் உலக முஸ்லிம்களாகிய நாம் திருப்தியடையலாம். அதாவது நாஸ்திகவாதமும் ஒழுக்கக்கேடும் மனம்போன்ற போக்கும் நாகரிகமாக அநாச்சாரமும், அந்தக் கிறிஸ்துவ சமூகம் வாழும் ஐரோப்பிய அமெரிக்க ரஷ்ய நாட்டிலிருந்து அற்று அழிந்து இல்லாமலாகிக் கொண்டு வருவதேபோல், நம் கீழ் நாடாகிய முஸ்லிம் உலகிலிருந்து அழிந்து கொண்டு வரவில்லே என்பதாகும். இது விஷயத்தில் நாம் ஆண்டவனுக்கு மிக மிக நன்றி செலுத்த கடமைப் பட்டவர்களா யிருக்கிருேம்.

ஐரோப்பிய நாட்டினர், மனிதன் வாழவேண்டிய நேர்த்தியான முறை என்று, நாகரிக பழக்க வழக்கத்தை உலகமெல்லாம் வியாபிக்

கச் செய்துள்ளார்கள். மேலும் 'நாங்கள் உலகத்தில் முன்னேற்ற மடைந்துள்ள சிறந்த சமூகம்' என்று பெருமையும் அடைந்து வரு கிறார்கள். ஆமாம், நவீன நாகரிக வழக்கம் என்னும் சிவிலிஸேஷனும் (Civilisation) நவீன விஞ்ஞானம் என்னும் (Science) சைன்ஸும் மிகமிக முன்னேற்ற மடைந்து விட்டதென்பதில் சந்தேகமில்லை. ஆனால் அதனால் உலகத்துக்கு எந்தத்துறையில் நன்மை உண்டாயிற்று என்பதை உய்த்துணர்ந்து பார்ப்போ மாயின், அதன் விபரீதக்காட்சி நம் கண்முன் காட்சியளிக்கிறது.

பொதுவாக நல்லதும் கெட்டதும், மேனாட்டிலிருந்து தான் நம் கீழ் நாட்டுக்கு விஜயம் செய்கிறது என்று சொல்லலாம். ஆதியில் சன்மார்க்கம் என்னும் மதங்கள் மேனாட்டிலிருந்தே கீழ் நாட்டுக்கு வந்து இங்கு வியாபித்துப்பெருகின. கிறிஸ்துவ மதமும் சரி, யூத மதமும் சரி, இஸ்லாம் மதமும் சரி, மேனாட்டிலிருந்தே தான் அதாவது அரபு, பாலஸ்தீன் முதலிய மேல் நாட்டிலிருந்து தான் இந்நாட்டுக்கு வந்தன. இதே விதமாகவே இக்காலை, நவீன நாக ரிகத்தின் பெயரால் நிரீசுவர வாதமும் நாத்திகத் தன்மையும், அம் மேனாடுகளையடுத்த ஐரோப்பிய நாடுகளிலிருந்தே இங்கு வியாபித்து வருகின்றன.

நவீன நாகரிக சூறாவளிக்கு நம் முஸ்லிம் சமூகத்தினர் மட்டு மல்ல, பொதுவாக ஹிந்துக்கள், புத்தர்கள், யூதர்கள், கிறிஸ்து வர்கள், பாரசீகர் எல்லோருமே தான் இலக்காகி, சீர்அழிந்துப் போய்க்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் எல்லோரிடமும் தான் ஆசாரம் குன்றி அனாச்சாரம் மேலோங்கி, அதிக்கிரமங்கள் அதிக மாகிக்கொண்டிருக்கின்றன.

ஹிந்துஸ்தான் என்னும் இந்தப் பாரத நாடு மிகவும் தூய்மை யான தேசமாக இருந்தது ஒரு காலத்தில். ஜீவகாருண்யமுள்ள புத்த மதமும், ஆசார ஒழுக்கமுள்ள புராதன ஹிந்து மதமும் நன் முறையில் வியாபித்து, ஒழுக்க ஆசாரம் நிலவி யிருந்தது. அத்து டன் அரபு நாட்டிலிருந்து உதயமாகி உயரிய சுடர் பரத்தி இங்கும் வியாபித்த தீனுல் இஸ்லாம் என்னும் நம் சன்மார்க்கமும் இடம் பெற்று நிலவி நின்றது. அந்நாள் தொடுத்து இந்நாள்வரை, நம் இந்தியா என்னும் இச்சிறந்த நாட்டில்தான், மஸ்ஜித்களும் தேவால யங்களும் சிறந்து, மலிந்து நிலவி வியாபித்திருந்து, ஏக இறைவனாகிய ஆண்டவனுடைய திருநாமத்தை நிலைநிறுத்திக் கொண்டிலங்கி வருகின்றன. இந்தியாவில் இருக்கும் எண் அளவுக்கு மஸ்ஜிது களும் தேவாலயங்களும், உலகத்தின் வேறெந்த நாட்டிலும் அதிகம் இல்லையென்று சொல்லலாம்.

எல்லாவற்றினும் நமது பரிசுத்த தீனுல் இஸ்லாம் இந்திய நாட்டில் வியாபித்துப் பரவியதைப்போல், அத்துனை எளிய முறை

வில் மற்றை நாடுகளில் பரவவில்லை. பண்டைய இந்தியாவில் அரபு வியாபாரிகளுடைய நற்சேவையினாலும், மூகலாய இஸ்லாமிய மன்னர்களுடைய அருந்தொண்டினாலும் இஸ்லாம் மதப்பிரகாசம் எங்கும் வியாபித்துப் பரவியது. ஆங்காங்கு மஸ்ஜித்களும் மத்ர ஸாக்களும் கல்வி ஸ்தாபனங்களும் பொது இடங்களும் தர்ம ஸ்தா பனங்களும் உற்பத்தியாயின.

இந்துஸ்தானிலிருந்து பாக்கிஸ்தான் இப்போது வேறொரு தனி நாடாக இருந்துவந்த போதிலும் ஆதியில் இவை ஒரே நாடாக, ஒரே பூமியாக, இஸ்லாத்துக்கு ஒரே உறைவிடமாக இருந்து வந்தது. மூகலாய மன்னர்கள் இமயமலை முதல் குமரி முனை வரை, வங்கக்கடல் முதல் மலையாள சமுத்திரம் வரை நான்கு திசைகளையும் அடைய வளைந்து இஸ்லாமிய ஆட்சிசெலுத்தி வந்தார்கள். மூகலாய மன்னர்களின் காலத்திலே, மஸ்ஜிதுகளும் இஸ்லாமியச் சின்ன அபூர்வ கட்டிடங்களும் இந்நாட்டில் ஏற்பட் டதைப்போல் வேறெந்த காலத்திலும் ஏற்படவில்லை. ஒவ்வொரு சுல்தானும், பாதுஷாவும், அமீரும், நவாபும், ஜமீன்தாரும், மிராஸ் தாரும் இந்நாட்டில் நற்குண நல்லொழுக்க அபிவிருத்திக்காக, இஸ் லாத்தின் பெயரால் அரும் பெரும் சேவை செய்து போனார்கள்.

அப்படிப்பட்ட இஸ்லாம், இன்று எப்படிப்பட்ட நிலையில் இருக் கிறதென்று சற்றே சிந்தித்துப் பாருங்கள். பெரியோர்களால் அரும் பாடுபட்டு வளர்க்கப்பட்டுவந்த இஸ்லாமியத் 'தஹ்ஸீப்' என்ற மதா சார ஒழுக்கம், இன்று எத்துணை க்ஷீணதசை யடைந்து போயிருக் கிற தென்பதை சற்றே சிந்தனை செய்து பாருங்கள்.

இந்தியா ஆதியில் இஸ்லாத்தின் பிறப்பிடமாக இருக்கவில்லை. இஸ்லாம் மதம் ஜனனமான புனித பூமி மக்கா நகரமாகும்; அது வளர்ந்து ஒளி பரப்பிய பூமி மதீனா நகரமாகும். இந்த மக்கா-மதீனா நகரங்களின் ஆட்சியாளர் அரபுகள் என்னும் முஸ்லிம்களே யாவர். அதன் பெயர் ஹிஜாஸ் அரசாங்கமாகும். அந்த அரபு ஹிஜாஸ் தேசம்தான், அன்றும் இன்றும் பரிபூரண இஸ்லாமிய நாடாகவே இருந்து வந்தது; இருந்தும் வருகிறது.

அப்படிப்பட்ட புனித அரபு தேசமும் மேனாட்டு நவீன நாகரிக சூறாவளிக்காற்று வீசியதன் காரணத்தால், இன்று எந்த நிலையில் இருந்து வருகிற தென்பதை சிந்திப்போமாக.

இன்றைக்கு இருபது—முப்பது வருஷங்களுக்கு முன் நம் இந் நாட்டிலிருந்து புனித ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றி வருவதற் காக மக்கா-மதீனா என்னும் ஹிஜாஸ் தேசத்துக்குப் போய், இஸ்லாம் பிறந்து வளர்ந்து உறைந்து நிலவும் இஸ்லாமிய சம்பிரதாயக் காட்சி களைக் கண்டு வந்த பழைய கால ஹாஜிகள், அங்குள்ள நல்ல பழக்க வழக்க ஆசாரங்களைப் பற்றியும் அரபு ஜனங்களுடைய மதபக்தி

ஒழுக்க சீர்மையைப் பற்றியும் என்னென்ன விதமாக வெல்லாம் புகழ்ந்து போற்றிக் கூறினர்கள், தெரியுமா?

அப்போது வெறும் மணல் மேடுகளாகவும் ஈச்சங் காடுகளாகவும், கட்டாந்தரைகளாகவும், மலைக்குன்றுகளாகவும் இருந்து வந்த அந்த அரபு நாட்டில் இப்போது மின்சார விளக்குகளும், டெலிபோன் வசதிகளும், தந்தி-தபால், ரேடியோ ஸ்தாபனத் தொடர்புகளும், ஆகாய விமான நிலையமாகிய 'ஏரோட்ரோம்'களும் நவீன நாகரிக இயந்திர மெஷீன் வசதிகளும் மலிந்து போயிருக்கும் அந்த அரபு ஹிஜாஸ் நாட்டிற்கு, இன்றும்தான் நம் இந்தியாவிலிருந்து ஆயிரக்கணக்கான பேர்கள் யாத்திரை போய் ஹஜ்ஜுக் கடமை நிறைவேற்றி விட்டு வருகிருர்கள்; ஆனல் இந்த நம் 'நவீன' ஹாஜிகள்—அந்த நவீன நாகரிக மக்கா—மதீனு வாழ்நவீன அரபுகளைப் பற்றியும், அங்கு காணப்படும் இஸ்லாமியக் காட்சிகளைப்பற்றியும், அங்குள்ள அரபு முஸ்லிம்களின் மனப்பான்மை மாறிப்போயிருக்கும் தன்மைகளைப்பற்றி என்னென்ன கூறுகிருர்கள் என்பது வருந்ததக்கதா யிருக்கிறது.

இதுதானு, நபிகள் நாயகம் முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், பிறந்து வளர்ந்துப் பிரசாரம்செய்து நற்பெயர் பெற்ற இடம்? இதுதானு திருநபியும் முஹாஜிரீன்களும் சத்திய இஸ்லாத்தின் சுபிக்ஷத்துக்காக ஹிஜ்ரத் செய்த இடம்? இதுதானு இஸ்லாத்தின் உறைவிடமாக, இஷாஅத்துல் இஸ்லாத்துக்காக மத்தியஸ்தானமாக இருந்த புனித இடம்? இங்கிருந்துதானு, ஹஜ்ரத் அபூபக்கர், ஹஜ்ரத் உமர், ஹஜ்ரத் உஸ்மான், ஹஜ்ரத் அலி (ரலியல்லாஹு அன்ஹும்) ஆகிய இஸ்லாமிய கலீபாக்கள், இஸ்லாத்தின் செம்பிறைக் கொடியை ஏந்தி ஆட்சி செலுத்தினர்? இங்கிருந்து தானு ஷாம், மிஸ்ர், ஈரான், இராக், பலஸ்தீன், அல்ஜீரியா, ரூம், துருக்கி, ரஷ்யா, ஆப்கானிஸ்தான், ஹிந்துஸ்தான், (பாக்கிஸ்தான், சிந்து) முதலிய தூரதூர தேசத்துக்கெல்லாம் அரபு வீரர்கள் இஸ்லாத்தின் பெயரால் அனுப்பிவைக்கப்பட்டனர்—என்றெல்லாம் கேள்வி கேட்கத் தோன்றுகிறது?

இன்றைக்கு எட்டு—அல்லது பத்து வருடங்களுக்கு முன், இந்தியாவிலிருந்து பாக்கிஸ்தான் நாடு பிரிந்துப் போய்விட்டது. இன்று அது இஸ்லாமிய நாடு என்றும், முஸ்லிம் ராஜ்யம் என்றும், முஸ்லிம்களே உறையும் தூயநாடுஎன்றும் அழைக்கப்பட்டுவருகிறது. பாக்கிஸ்தான் ஒரு இஸ்லாமிய ராஜ்ஜியம் என்பதற்காக சென்ற எட்டாண்டு காலத்தில், ஏராளமான முஸ்லிம்கள்-அதாவது சுமார் ஒரு ஒரு கோடி முஸ்லிம்கள் ஹிந்துஸ்தானத்திலிருந்து அந்த முஸ்லிமிஸ்தானத்துக்கு குடியேறிப் போய் விட்டார்கள். எனவே, அங்கு மொத்தம் ஆறு கோடி முஸ்லிம்கள் பிரஜைகளாய் இருந்து வருகின்றனர் என்று சொல்லப்படுகிறது.

அன்பர்களே, இது சொல்வதற்கும் கேட்பதற்கும் இனிமையான விஷயமாகத்தான் காணப்படுகிறது. ஆனால், 6-கோடி முஸ்லிம்கள் உறையும் அந்த பாக்கிஸ்தான், உண்மையில் முஸ்லிம் ராஜ்யமாக விளங்குகிறதா? என்றால் அதுதான் இல்லை. அங்குள்ள, ஆண்களும் பெண்களும் பெயரளவில்தான் முஸ்லிம்களாக இருக்கிறார்கள்; அந்தரங்கத்தில், உண்மை முஸ்லிம் பக்தகோடிகளாய்த் திகழவில்லை. அப்ஸோஸ்!

நம் இந்திய நாட்டைவிட பாக்கிஸ்தானில்தான் நவீன நாகரிகமும் கோஷா-பர்தா இன்மையும் அதிகமதிகம் தாண்டவமாடுகிறதாம். சன்மார்க்க பக்தி ஒழுக்கம் அற்றுப்போய் விட்டதாம். அந்தோ! எல்லாம் வல்ல இறைவன், குறிப்பாக அந்நாட்டு முஸ்லிம்கட்கும், பொதுவாக இந்நாட்டு முஸ்லிம்கட்கும், பிறகு எந்நாட்டு முஸ்லிம்கட்கும் சன்மார்க்க மனப்பான்மையையும், மதபக்தி ஒழுக்கத்தையும் இஸ்லாமியப் பற்றையும் அதிகம் தந்தருள்வானாக. ஆமீன், யாறப்பல் ஆலமீன்!

---


## மிப்தாஹுஸ் ஸுபுஹானி பீ தர்ஜுமத்தி மஜ்மூஉஸ் ஸுல்தானி

இந்த கித்தாபாகிறது ஹனபீ மதுஹபுக்கும் ஷாபிஈ மதுஹபுக்கும் அவசியமாகிய நூதனமான ஹுக்முகளைப் போதிந்த பிக்ஹு மஸ்அலாக்களாகும். அதினின்றும் ஒவ்வொரு ஹுக்மையும் சகல ஜனங்களும் இலகுவா யறியும் பொருட்டு ஸுவாலும் ஜவாபுமாக சேகரிக்கப்பட்டிருக்கிறது. இது சுல்தான் மஹ்மூது கஸ்னவீ றஹிமஹுல்லாஹு அவர்களால் தங்களுடைய காலத்தில் உள்ள அநேக உலமாக்களின் உதவியால் சேகரிக்கப்பட்டு பார்ஸீ பாஷையிலும் உருது பாஷையிலும் அருமையாய் விளங்கி வந்ததை நம்மவருக்கு உபயோகமாகும்படி தமிழிலும் அரபுத் தமிழிலும் அச்சிடப்பட்டிருக்கிறது.

கிரையம் சுத்தத் தமிழ் கிளேஸ் காகிதம் கலிகோ பைண்டு ரூ. 2—6—0

ஷை அரபுத் தமிழ் வெள்ளை காகிதம் கலிகோ பைண்டு ரூ. 5—0—0

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

(2-வது பகுதி)

# அனுதை அஷ்ரப்.

நே. மு. கவுஸ்.

அஹ்மதின் அப்பா சோயுற்ருர். அஷ்ரப் அவருக்கு பணி யாற்றுவதில் எடுத்த சிரமத்தை அவர் உணர்ந்து, ஒருநாள் அஹ் மதை கூப்பிட்டு, "என் உடல்நிலை சீர் குலைந்து வருகிறது. இனி என்னை நம்பாதே! அஷ்ரப்பை நீதான் கண்காணித்து வரவேண்டும்" என்று சொல்லிக் கொண்டிருக்கையில், அஷ்ரப்பின் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக வழிவதைக் கண்டார்.

அஹ்மதின் அப்பா:—அழாதே அம்மா! உன்னை அஹ்மத் கைவிடமாட்டான் என்று ஆறுதல் கூறினர். அஹ்மத் தலை குனிந்த வண்ணம் மௌனமாக நின்று கொண்டிருந்தான். அவன் கண்களிலிருந்தும் கண்ணீர் வடிந்து கொண்டிருந்ததை அவன் அப்பா உணர்ந்து, "அஹ்மத் நீ ஆண் பிள்ளையாச்சே! கண்ணீர் வடிக்கலாமா" என்று அவனுக்கும் தேறுதல் மொழி பகன்ருர். "அக்தர் எங்கே?" என்று அவர் கேட்டபோது, பக்கத்தில் நின்றுக் கொண்டிருந்த வீட்டு காவல்காரன் கரீம், "அவர் வீட்டில் இல்லை எஜமான்" என்று கூறினன்.

"எங்கே போனன்" என்று மீண்டும் கேட்டார்.

"அவர் வீட்டிலிருந்து போய் இரண்டு நாள் ஆய் விட்டது" என்ருன் கரீம். இதைக் கேட்டு பலஹீனமுள்ள அவர் உடல் நடுக்கம் கொண்டது.

"ஆண்டவன் அவனுக்கு நல்வழி காட்டுவானக" என்றது அவர் உள்ளம்.

'பெற்றமனம் பித்து பிள்ளைமனம் கல்லு' என்பது போல அவர் மனம் கரைந்தது.

அக்தர் நேர காலங்களில் வீட்டுக்கு வருவதில்லை. தமது அப்பாவின் ஸ்தாபனத்திற்குச் செல்வான். அவ்விடமுள்ள குமாஸ் தாக்களை துன்புறுத்தி வேண்டிய பணத்தை வாங்கிக் கொண்டு நாட்கணக்காக சுற்றிக் கொண்டிருப்பதே அவன் தொழிலாகி விட்டது. கெட்ட செயல்களில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதை உணர்ந்து அவன் அப்பா, எல்லா சொத்துக்களையும் அஹ்மதின் பெயருக்கே எழுதிவைத்து, இந்த ரகசியத்தை தமது காரியதரிசி யான ரஹீம் சாயபுக்கு மட்டிலும் தெரிவித்து ஷெ தஸ்தாவேஜ் களை எல்லாம் அவர் இடம் ஒப்படைத்து விட்டார். ரஹீம் சாயபு உண்மை உள்ளம் படைத்தவர்; கண்ணியமானவர். இவர் ஸ்தா பனத்தில் சேரும்போது, ஒரு சாதாரண கணக்கராக முப்பது

ரூபாய் சம்பளத்தில் சேர்த்தவர். இவரின் வேலை திறமையையும், ஓயாத உழைப்பையும் நேர்மையையும் உணர்ந்து அக்பர் சாயபு ஸ்தாபனத்தை அவர் இடம் ஒப்படைத்தார். ரஹீம் சாயபின் மேல் பார்வையிலேயே ஸ்தாபனம் நன்கு நடந்து வந்தது.

ரஹீம் சாயபுக்கு மணமாகி 12 வருஷங்கள்வரை குழந்தை இல்லாமல் நோன்பிருந்து 13-ம் ஆண்டில் ஹமீதா பிறந்தாள். ஹமீதா பிறந்த 5-ம் ஆண்டிலேயே தாயை இழந்தாள். ரஹீம் சாயபும் தனது தவப்புதல்வியின் பாசத்தால் மிகுந்த அன்புடன் வளர்த்து வந்தார். இரண்டாம் தாரம் மணம் செய்து கொள்வதை அவர் வெறுத்தார்.

ஹமீதாவுக்கு வயது 15 ஆனபோது பருவமடைந்தாள். ரஹீம் சாயபு நல்ல வரனைப் பார்த்து அவளுக்கு மணம் முடிக்க வேண்டும் என்று பேராவல் கொண்டிருந்தார். ஆனால், ஹமீதாவுக்கும், அக்தருக்கும் இடையில் காதல் நோய் வளர்ந்து வருவதை அவர் உணரவில்லை.

அக்தர் ரஹீம் சாயபிடம் மிகுந்த மரியாதையுடனும், பரிவுடனும் நடந்து கொண்டு வந்தது அவருக்கு புதிராகவே இருந்தது.

அக்தர் தன் காதலியை காணும் பொருட்டு ஏதாவது காரணத்தை வைத்துக் கொண்டு அடிக்கடி ரஹீம் சாயபு வீட்டிற்கு செல்வான். அவன் அப்படி வருவதை அவரால் தடை செய்ய முடியவில்லை. அதனால் தன் மகளைமட்டும் மிகவும் ஜாக்கிரதையாக கண்காணித்து வந்தார்.

அஹ்மதின் அப்பாவுக்கு நாளடைவில் வியாதி அதிகரித்துக் கொண்டே சென்றது. எத்தனையோ டாக்டர்கள் எத்தனையோ வைத்தியர்கள் சிகிச்சை செய்து பார்த்தும் அவருக்கு குணமானபாடில்லை.

அஷ்ரப் அவருக்கு பணியாற்றுவதில் சிறிதுகூட தளரவில்லை.

அஹ்மத் சோக கடலில் மூழ்கி மிகுந்த ஏக்கம் கொண்டான். அக்பர், "அஹ்மத்!" என்று மெல்லிய குரலில் கூப்பிட்டார்.

"என்ன வேண்டும் அப்பா!" என்று கேட்டான் அஹ்மத்.

நான் இனி பிழைக்கமாட்டேன். எல்லாம் நீதான் என்று கூறிக் கொண்டிருக்கையில் அந்தோ! அவர் மூர்ச்சையடைந்தார்.

அன்று இரவு ஒருவரும் கண் அயர்ந்தவர்கள் இல்லை. இரவு ஒரு மணிக்கு அவர் ஆவி வானுலகம் நோக்கி சென்றது.

அக்பர் சாயபு இறந்ததிலிருந்து அஷ்ரப் மனநிம்மதியற்றவளாய் தோன்றினள். அஹ்மத் அஷ்ரபை அடிக்கடி விசாரிப்பான், ஆனல் அஷ்ரப் ஒன்றும் இல்லை என்ற பதிலை தவிர அவள் வாயிலிருந்து வேறென்றும் வராது. தூய்மையான இளம் உள்ளம். தான் அனாதையான காட்சி அவள் கண் முன்னல் வந்து காட்சி அளித்துக் கொண்டே இருந்தது.

அஷ்ரப்பிற்கு இரண்டு அண்ணனும் தாயும் தகப்பனும் இருந்தார்கள். அண்ணன்கள் இருவரும் ஒரு மில்லில் வேலை பார்த்து வந்தனர். அதில் கிடைக்கும் ஊதியத்திலிருந்து இவர்கள் வாழ்க்கை நடந்துவந்தது. திடீரென்று மில்லை மூடிவிடவே, வருவாய்க்கு வழியின்றி திண்டாடினர். பாவம் என் செய்வார்கள். கஷ்டத்தை சகிக்காமல் அஷ்ரபின் இளைய அண்ணன் தாம் வெளியூர் சென்று சம்பாதித்து பணம் அனுப்புவதாக சொல்லி எல்லோர் இடமும் விடைபெற்று சென்றவன் 10 மாத காலமாகியும் அவன் இருப்பிடமும் தெரியாமல் போய்விட்டது. இதற்குள் ஊரில் காலரா வியாதி துரிதமாக பரவிக் கொண்டு வந்தது. வியாதியை தடுக்க அரசாங்கம் பல முயற்சிகள் செய்து வந்தது. பிடித்தது அஷ்ரபின் அண்ணனை: சென்றுன் வானுலகம்! பிள்ளைகளின் ஏக்கத்தால் உயிர் நீத்தாள் தாய்! பிழைக்க வேறு வழியின்றி அஷ்ரபும் அவள் அப்பாவும் வெளியூர் சென்றனர். அஹ்மதின் சைகிளுக்கு இறையானுன் கிழவன்! அனுதையானுள் அஷ்ரப்! ஆதரவு பெற்றுவந்த அஹ்மதின் அப்பா இறந்த துயரம் அவள் இளம் உள்ளத்தை விட்டு அகலவில்லை.

அஷ்ரபின் எழிலை கண்டு-காமவெறிபிடித்து அலைந்தான் அக்தர். இவளை எப்படியாகிலும் அடையவேண்டும் என்று எண்ணம் கொண்டிருந்தான். பலநாள் முயற்சியிலேயே மூழ்கி கிடந்தான். ஆனல் பலன் இல்லாமல் போய்விட்டது.

அஹ்மத் அவன் அப்பாவுக்குப் பின் ஸ்தாபனத்தை கவனித்து வந்தான்.

ஒருநாள் ஸ்தாபனம் விஷயமாக வெளியூர் சென்றுவர நேர்ந்தது. மாலி கரீம் இடம் வீட்டை ஜாக்கிரதையாக பார்த்துக்கொள்ளும்படியாயும் அவன் வெளியூர் சென்றுவருவதாக சொல்லிவிட்டு நேரே கடைக்கு சென்று காரியதரிசியான ரஹீம் சாயபுவையும் கூட்டிகொண்டு ரயிலடிக்கு இருவருமாக சென்றனர். வண்டிவர சில நிமிடங்கள் இருந்தன. இதற்குள் கடை பையன் ஓடிவந்து இந்தாங்க! எஜமான் தந்தி வந்தது என்றுன். உடனே தந்தியைப் பிரித்து பார்த்தான் அஹ்மத். அதில் கீழ்கண்டவாறு இருந்தது.

"என் சித்தப்பா பம்பாயில் இறந்து விட்டார். நான் இன்று விமான மூலம் பம்பாய் போகிறேன் ஒரு வாரம் கழித்து வரவும்."

"சுப்ஹான்"

என்று அஹ்மதின் லேவாதேவிக்காரர் கொடுத்து இருந்தார். அஹ்மதின் பிரயாணம் தடைபட்டது. நேரே கடைக்கு சென்று. ஒரு கடிதம் சுப்ஹான் சாயபு ஸ்தாபனத்திற்கு தந்தி கிடைத்ததாயும் பிரயாணத்தை தடை செய்து கொண்டதாக எழுதி பையன் இடம் கொடுத்து 11 ½ மணி தபால் வண்டியில் சேர்க்கும்படியாக சொல்லி விட்டு இவன் வீட்டுக்கு வரும்போது இரவு 10 மணி ஆகி இருந்தது.

அக்தர்க்கு அஹ்மத் வெளியூர் சென்றுவருவதாக சொல்லி போன விஷயம் கேள்வியுற்று, தன் சகாக்களை கூப்பிட்டு அன்று இரவு அஷ்ரப்பை தூக்கிகொண்டு வரக் கட்டளை யிட்டான்.

காவல்காரன் கரீமுக்கு அக்தரின் செயல் தெரியவந்தது. அஷ்ரப் தினம் தாழ்வாரத்தில் படுத்துக் கொள்வது வழக்கம். கரீமுக்கு விஷயம் எட்டியதும் அஷ்ரபை அறையில் படுக்கச்சொல்லி விட்டு அவன் அஷ்ரப் படுத்துகொண்டிருந்த கட்டிலிலேயே போர்த்தி படுத்துக்கொண்டான்.

கரீமுக்கு யாரோ வருவது காலடி சப்தம் கேட்டது. தூங்கும் போல பாவனை செய்தான்.

அஹ்மத்: கரீம் என்றான்.

கரீம்: யார்! சின்ன எஜமானா?

அஹ்மத்: ஆமாம்.

கரீம்: ஊருக்குப் போகலிங்களா?

அஹ்மத்: இல்லை, என்று தந்தி வந்த விபரத்தை சொல்லிக் கொண்டே, ஆமாம்! அக்தர் வந்தாரா? என்றான்.

கரீம்: வரவில்லை, வந்து!

அஹ்மத்: வந்து! என்ன?

கரீம்: ஒன்றுமில்லை என்று தலை குனிந்துகொண்டிருந்தான். அவன் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்து கொண்டிருந்ததைக் கண்ட அஹ்மத், விஷயம் என்ன? என்று கேட்டான்.

கரீம்: பெரிய எஜமான்!

அஹ்மத்: அக்தர்க்கு ஏதாகிலும் நேர்ந்ததா?

கரீம்: இல்லை!

அஹ்மத்: விஷயத்தை சொல்?

கரீம்: (காதடுமாறி கொண்டே) பெரிய எஜமான், நீங்கள் வெளியூர் போன விஷயம் கேள்வியுற்று இன்று இரவு 12-மணிக்கு அஷ்ரப்பை தூக்கி கொண்டு வர ஏற்பாடு செய்து இருக்கிறார் என்றான்.

அஹ்மத்: "என்ன"?!! அஷ்ரப்பையா! என்று ஓலமிட்டான். தான் செய்த தவறுக்காக அனாதையாகிவிட்ட அஷ்ரபின் வாழ்க்கையில் குறுக்கிடுவதை யுணர்ந்து ஆத்திரங் கொண்டான். "கரீம் நான் இங்கே படுத்துக் கொள்கிறேன். நீ உன் இடத்தில் படுத்துக்கொள். இந்த அற்பனுக்கு பாடம் கற்பிக்கிறேன்" என்றான்.

கரீம்: இல்லை எஜமான், நான் படுத்துக் கொள்கிறேன், நீங்கள் உள்ளே படுத்துக்கொள்ளுங்கள் என்றான்.

அஹ்மத், என்றும் சினங்கொள்ளாதவன் அன்று "போ !! நான் பார்த்துக் கொள்கிறேன்." என்று உறத்த குரலில் சொல்லவே க்ரீம் நடுகடுங்கி விட்டான். "அஷ்ரப் எங்கே ?" என்ருன் அஹ்மத்.

கடைசி அறையில் படுத்து தூங்குகிராங்கோ என்ருன் கரீம்.

அஹ்ம்த் அஷ்ரப்படுத்துகொண்டிருக்கும் அறைபக்கம் சென்று பார்த்தான். கதவு தாளிட்டு இருந்தது. அறையில் இருந்து உறங்கும் ஒலிமட்டும் ஒலித்துக் கொண்டிருந்தது. அஹ்மத் அவன் அறைக்குச் சென்று அவன் அப்பாவிற்கு அரசாங்கம் அனுமதித்து கொடுத்த கைத்துப்பாக்கியை எடுத்து சட்டை உறைக்குள் போட்டுக் கொண்டான். அஹ்மதின் மனம் பலவாறு எண்ணங் கொண்டிருந்தது. இவன் அப்பா சொன்ன வார்த்தைகள் மனக் கண்முன்னல் வந்து நினைவூற்றியது. 'அஷ்ரப்பை நீதான் கண்காணித்துவர வேண்டும்' என்று சொன்ன வார்த்தைகள் வீடு பூராவும் எதிர் ஒலிக்கும்போல் தோன்றியது. மதில் தாங்கி கடிகாரத்தை ஏறிட்டுப்பார்த்தான். 11-மணி என்று அறிவிக்க தயாராக நின்றுகொண்டிருந்தது பெரிய முள்ளு. தம் பிரயாணம் தடைப்பட்டது ஆண்டவன் செயல், இன்று நாம் இல்லாது இருப்பின் எவ்வாறு அப்பாவின் சொல்லை நிறைவேற்ற முடியு மென்று ஆண்டவனுக்குத் தன் நன்றியை தெரிவித்தான். கட்டில் பக்கம் படுக்கச் சென்ருன். யாரோ நிற்பது போல் தோன்றியது. யார் அது ? என்ருன் அஹ்மத்.

"நான் தானங்க எஜ்மான்" என்ருன் கரீம்.

"இன்னும் படுக்க செல்ல வில்லையா கரீம்" என்ருன் அஹ்மத்.

கரீம் மௌனமாக இருந்தான். கரீமின் தியாக தன்மையை கண்டு கரீமை கூப்பிட்டு, சண்டாளர்கள் என்னை அஷ்ரப் என்று நினைத்து தூக்கிகொண்டுச் செல்வார்கள். நான் அவர்களை பார்த்து கொள்கிறேன். நீ அஷ்ரப்பை பாதுகாத்து கொள் என்ருன் அஹ்மத்.

கரீம் தமக்கென்று தடுத்திருந்த அறைக்கு சென்ருன்.

நிசப்தம் நிலவியது. மதில் கடிகாரத்தின் டக்டக் என்ற சப்தம் மட்டும் ஒலித்துக் கொண்டிருந்தன. போர்வையை இழுத்துபோர்த்தி படுத்துக் கொண்டான். சண்டாளர்கள் மதில் மீதிருந்து குதிக்கும் சப்தம் கேட்டது. மூன்று சண்டாளர்கள் வந்தனர். அஹ்மதின் கட்டிலை வட்டமிட்டனர். அங்குமிங்கும் பார்த்து விட்டு தலைபக்கம் ஒருவனும் கால்பக்கம் ஒருவனும் தூக்கி தாங்கி கொண்டனர். ஒருவன் வழி காட்டியாக இருந்தான். அக்தர் இருப்பிடத்திற்கு எடுத்துச் சென்று அவனிடம் ஒப்படைத்தனர். ஒரு பணப்பையை அவர்கள் இடம் கொடுத்து போக சொல்லி விட்டான் அக்தர்.

கட்டிலின் மேல் உட்கார்ந்து கொண்டு, "அன்பே! என் ஆருயிரே! உனக்காக எத்தனை நாள் நான் ஏங்கி கொண்டிருந்தேன்

தெரியுமா? உன்னை அடைய வேண்டுமென்று தான் இத்திட்டமிட்டு உன்னைக் கொண்டு வரச்செய்தேன். உன்னை அடிமையாக்கி கூண்டில் அடைத்து உன் எழிலைரசிக்க காத்துக் கொண்டிருக்கிறுன் அஹ்மத்'' என்று சொல்லி கொண்டே மேல் போர்வையை இழுத்தான் அக்தர். சீறிட்டு எழுந்தான் அஹ்மத்.

அஹ்மதை கண்டதும் திடுக்கிட்டு ஓட முயற்சித்தான் அக்தர். ஆனால் அஹ்மத் அவனை விடவில்லை. அஹ்மதுக்கு இம்மாதிரி செயல்களில் முதன்மையானதால் அவன் உடல் கடுக்கங் கொண்டுள்ளது. அண்ணனை பலவாறு பேச எத்தணித்தான். ஆனால் அவன் நா எழவில்லை. தன் உடலை ஒரு விதமாக சமாளித்துகொண்டு ''அண்ணா! இச்செயல் உமக்கு தகுமா? ஆதரவற்ற அப்பெண்ணை என்னால் அனாதையாகிப் போனவளை நீ கெடுக்க எண்ணங் கொண்டுள்ளதைவிட முதலில் என்னை கொன்றுவிடு. அப்பாவின் கட்டளையை நிறைவேற்றியதாக என் உயிர் சாந்தி அடையும்'' என்று சட்டை உறையிலிருந்து கை துப்பாக்கியை எடுத்து நீட்டினான். தம்பி என்று கட்டியணைத்து கொண்டான். இருவர் கண்களிலிருந்தும் ஆனந்த கண்ணீர் வடிந்தது.

அன்று முதல் அக்தர் பழைய அக்தராக இல்லை. புதிய அக்தராக மாறிவிட்டதைக் கண்டு எல்லோரும் வியப்படைந்தனர். ரஹீம் சாயபிற்கு அக்தர் ஹமீதாவை காதலித்து வந்த விஷயம் செவிக்கு எட்டியது. இன்று கல்யாணம் வைத்துக் கொள்ளலாம்? என்றான் அஹ்மத் ரஹீம் சாயபுவை. இரண்டும் ஒரே நாளில் வைத்துக்கொள்ளலாம் என்றார் ரஹீம் சாயபு புன்சிரிப்புடன். அக்தர்க்கும் ஹமீதாவுக்கும் அஹ்மதிர்க்கும் அஷ்ரபிர்க்கும் கல்யாணம் சிறப்பாக நடந்தேரியது. அஷ்ரப் செல்வ சீமாட்டியானாள்! மாலி கரீமின் ஆனந்தத்திற்கு சொல்லவும் வேண்டுமா?

முற்றிற்று.

---


## உர்து ஹலீஸ் காயிதா

இது உர்து கற்றுக் கொள்வதற்கு சுலபமான பாலர் பாடம். இதில் படங்களைக் கொண்டு இலகுவாய் குழந்தைகள் உர்து வார்த்தைகளைக் கற்றுக் கொள்ள புதிய முறையில் போடப்பட்டுள்ளது. இரண்டு கலர்களில் அச்சிடப்பட்டது.

இதன் விலை அணா. 5

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ 20, ஷைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ், 5.

# சிறைப் பறவை சிப்கத்துல்லா

## அல்லது

# துப்பு துலக்கிய தூயவர்.

## 2-வது அத்தியாயம் (தொடர்)

"இல்லை, காப்டன், கரீமுல்லாகானைப்பற்றி அதிகம் தெரியாது."

"மணமகன் யார்?"

"நாகரிக மனிதன். கரீமுல்லாகான் காரிய சாதனையில் 'கண்' உள்ளவர்; சரியான மருமகனையே அவர் தேர்ந்தெடுத்திருக்கிறார். ராணுவத்தில் அவன் காப்டனும். பார்வைக்கு நல்ல மனிதனாகத் தோன்றுகிறான்."

இரவு 11-15 மணிக்கு பஹதூர் வீடு திரும்பியபோது, சிப்கத்துல்லா கம்பீரமாகக் கட்டிலில் காகிதக் கட்டுகளுடன் உட்கார்ந்திருந்தார். அருகில் அனேக காகிதங்கள் கசக்கி யெறியப்பட்டிருந்தன.

அடுத்த நாள் பிற்பகல் வேலூரிலுள்ள கரீமுல்லாகானின் மாளிகைக்குச் சென்றார் சிப்கத்துல்லா. அவரது அழகிய உருவத்தைக் கண்ட எவரும், இரு தினங்களுக்கு முன்பு அவர் சிறையில் அடைப்பட்டிருந்த கைதி என்பதை எண்ணிப் பார்த்திருக்கவும் முடியாது.

மணப்போராட்டத்தை இறுதியாகச் செய்து பார்ப்பதென்ற சங்கற்பத்துடன் சிப்கத்துல்லா வந்திருந்தார். அப்போராட்டம் வெற்றியளிக்குமா, எவ்விதமாக விவாதத்தைத் துவங்குவது என்பது எதுவும் அவர் அறியமாட்டார். காலப்போக்குப்படி சமயோசிதமாக நடந்து கொள்ளலாமென அவர் உத்தேசித்திருந்தார்.

மெயின் பஜார் ரோடுக்குள் பிரவேசித்ததும் தாருஸ்ஸலாம் (சாந்தி நிகேதனம்) என்னும் கரீமுல்லாகானின் மாளிகைமுன்பு இரு லிமோஸின் கார்கள் நின்று கொண்டிருப்பதைக் கண்ணுற்று, மாளிகையில் மங்கள காரியம் என்ன நடக்கிறதென வியந்தார்.

"தாருஸ் ஸலாம்" தனிக்கட்டடம். 'காங்க்ரீட்' கட்டடமான அதன் சுவர்கள் பளபளவென பார்வைக்குப் பகட்டாக இருந்தன. முன் வாயில் வழியாகச் செல்லாமல், பக்கப் பாதையோடு உள்ளே பிரவேசித்தார். அப்பாதை பூந்தோட்டத்துக்குச் சென்றது; இங்கு கரீமுல்லாகான் காற்றுக்காக வந்தமர்வது வழக்கம்.

உள்ளே வந்ததும் சிப்கத்துல்லா சிறிது தயங்கினர். சமையல் காரி யொருத்தி பட்லருடன் சச்சரித்துக் கொண்டிருந்தாள். அவனது முகம் சுருக்கம் கண்டிருந்தது; தலையைக் கவிழ்ந்து கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான். செவிடன்கூட தூரவிருந்து கேட்கக் கூடிய விதத்தில் அப்பெண் இரைச்சலாக பேசிக்கொண்டிருந்தாள்.

“எம்மாதிரி வீடுகளில் நீர் வேலை பார்த்திருக்கிறீர் என்பதும் எம்மாதிரி மனிதர்களோடு நீர் பழகி யிருக்கிறீர் என்பதும் எனக்குத் தெரியாது. ஆனல் திரும்பவும் உம்மை எனது அறையில் எனது பெட்டிகளைத் திறந்து பார்த்திருக்கும் பொழுது பார்த்து விட்டேனுயின், எஜமானரிடம் சொல்லிவிடுவேன். தெரிந்ததா?”

“இல்லை, அம்மா.”

“நீர் ஒரு பகற் கொள்ளைக்காரனுக விருந்து இம்மாதிரி செயலில் ஈடுபட்டால் அதனை என்னல் புரிந்து கொள்ள முடியும். ஆனல், மரியாதையுள்ள மனிதரென மதிக்கப்படும் நீர் இம்மாதிரி இரகசிய, இழிவான செயல்களைச் செய்வதை நான் சகித்துக் கொள்ள மாட்டேன். கள்ளப் பார்வையையும் கள்ள செயல்களையும் தவிர்த்துக் கொள்ளும். புரிந்ததா? நான் சகித்துக்கொண்டிருக்க மாட்டேன்”

“சரி, அப்படியே ஆகட்டும் அம்மா.”

இச்சம்பாஷணையை சிப்கத்துல்லா வியப்போடு கேட்டுக்கொண் டிருந்தார். பட்லர் பஷீரை அவருக்குத் தெரியும். ஆபத்து நிறைந்த, அபாயம் மிகுந்த தொழிலை விட்டு கண்ணிய மிகு வாழ்வை கரீமுல்லாகான் மேற்கொண்டதும் பட்லர் பஷீர் ஒழுக்கக் கேடான வழியை விட்டு விட்டான். கொள்ளைக்காரனுகவும் கைதியாகவும் இருந்து அபகீர்த்தி பெற்ற அவன் எஜமானருக்கு விசுவாசமுள்ளவன்போல் பாசாங்கு செய்தான். தொழிலைப் பொறுத்தவரை, அவனைப் போன்ற கேடு கெட்ட பட்லரை பார்த்திருக்க முடியாது.

சமையல்காரி வனப்பும் வசீகரமும் நிறைந்த வனிதை. அவளது கருங்கூந்தல் காண்போர் கண்களுக்குக் குளிர்ச்சி அளிப்பதாக விருந்தது. அழகிய அவளது வதனத்தில் அருவருப்பு குடிகொண் டிருந்தது; கருங்கண்களில் கனல் வீசிக்கொண்டிருந்தது. பட்லர் பஷீர் ஒத்துக் கேட்கும், ஒழுக்கங் கெட்டவன்; அவனது பழுதுள்ள பண்டைக்காலத்தின் பாரம்பரியம் அது. மற்ற வேலைக்காரர்களும் இதை போன்ற செயல்களைக் கொண்டிருந்தமையால் வெளியேற்றப் பட்டிருக்கின்றனர். பஷீரைக்கூட பயமுறுத்திப் பார்த்துவிட்டார் கரீமுல்லா; பயன் பெறவில்லை. அப்பெண் அவர் வந்ததையும் கவனியாது வீட்டுக்குள் நுழைந்து விட்டாள்.

அவனுக்குப் பின்புறமாக வந்து, “அவளை ஆத்திர மூட்டி விட்டாய்” என்று சிப்கத்துல்லா கூறியதும் பட்லர் பஷீர் பதட்ட

மடைந்து விழித்தான். "ஆ, சிப்கத்துல்லா சாஹிப், நீங்கள் எப்போது மாமியார் வீட்டிலிருந்து வந்தீர்கள்?" என்று அவன் வினவினன்.

சிரித்துக்கொண்டே சிப்கத்துல்லா சொன்னர்: "நேற்று என்னை விடுதலை செய்தார்கள். கரீமுல்லாகான் எவ்வாறு இருக்கிருர்?"

மூக்குச்சிந்தி, அதேசமயத்தில் சிப்கத்துல்லா மீது வைத்த 'கண்' வாங்காமல் இருந்துவிட்டு சற்று நேரத்துக்குப் பிறகு சந்தேகத்தோடு அவன் வினவினன்: "நீங்கள் எவ்வளவு நேரமாக இங்கு இருக்கிறீர்கள்?"

"உங்களது சுவாரஸ்யமான சம்பாஷணையின் கடைசிக்கட்டத்தில் நான் வந்து சேர்ந்தேன். பஷீர், நீ இன்னும் திருந்தவில்லை போலிருக்கிறது" என்ருர் சிப்கத்துல்லா.

முகத்தைச் சுளித்துக்கொண்டே பஷீர் பகர்ந்தான் "நீங்கள் பொல்லாத போக்கிரி—அவ்வாறு நீங்கள் இல்லாவிட்டாலும்—எனச் சொல்லிக்கொள்கிருர்கள். வாழ்க்கையைப்பற்றி அவள் அறிந்ததென்ன? நீங்கள் இன்னும் எஜமானரைக் காணவில்லையா? அவர் வீட்டில் இருக்கிருர்; ஒரு விடிையில் உங்கள் வருகையை அவருக்குத் தெரிவித்துவிடுகிறேன். அவர் சௌக்கியமாக இருக்கிருர். மகள் மரியமைப்பற்றிதான் அவர் கவலை. அவள் பாதம்பட்ட பூமியை புனிதமென அவர் கருதுகிருர்; இது இயற்கைக்கு ஒத்ததல்ல. புத்திரவாஞ்சை அவசியம்தான்; ஆயினும் அளவுமீறிச் சென்ருல் அது அனர்த்தத்தில் கொண்டு விடுகிறது. "அடியாதமாடு படியாது" என்ற மூதுரையை நாம் கேட்டிருக்கிருேமல்லவா?"

காலடிச் சப்தம் கேட்டு சிப்கத்துல்லா திரும்பிப் பார்த்தார். கரீமுல்லா கான் வந்துகொண்டிருந்தார். முகத்தில் களைவீசிய போதிலும் கவலைக் குறியும் காணப்பட்டது. அறுபது வயதடைந்த அவர் தலை நரைத்திருந்தது; முகத்தில் சுருக்கம் விழுந்திருந்தது. எனினும், பலசாலியாகவும் தைரியசாலியாகவும் விளங்கினர். சிப்கத்துல்லாவைக் கண்டு சிறிது நேரம் தயங்கிவிட்டுச் சிறிது புன்னகையை அவர் வரவழைத்துக் கொண்டார். மங்களகரமான மணகாரியம் நிகழும்போது 'சிறை கறை' படிந்த சிப்கத்துல்லாவின் விஜயத்தை அவர் விரும்பவில்லை.

"ஆ! சிப்கத்துல்லா! நல்லவிதமாகக் காலம் கழிந்ததா?"

வாலிபனின் தோள்மீது கைபோட்டு, அவரை அழைத்துச் சென்ருர்.

சிப்கத்துல்லா சொன்னர்: "கஷ்டகாலம்தான்; என்மீது ஏதாவது அனுதாபம் கொண்டிருந்தால் அதுவீண்"

அவரது கரங்களைப்பற்றி யிழுத்து, சிமென்ட் பெஞ்சில் அவரை அமரச்செய்தார். அவரது முகபாவத்தை சிப்கத்துல்லாவால் சிந்தித்துணர முடியவில்லை.

"அங்கு எனக்குத் தெரிந்த எவரையாவது கண்டீரா ?"

"ஆம்! கரீம் ஷரீபைக்கண்டேன்"

"அம்மனிதனைப்பற்றித்தான் நான் சிந்தித்துக்கொண்டிருக்கிறேன். அவன் எப்படி இருக்கிறான் ?"

"அவன் விடுதலையாகி ஆறுமாதங்களாகின்றன. உங்களுக்குத் தெரியாதா ?"

இதுவரை, 'உப்பு சப்பு' இல்லாமல், உதாசீனமாகக் கேட்டுக்கொண்டிருந்த கரீமுல்லாகானின் முகத்தில் கவலை மேகமிட்டது.

"ஆறுமாதங்களாக வெளியே இருக்கிறானா ? உனக்கு நிச்சயமாகத் தெரியுமா ?"

"ஆம் தெரியும்"

"எனக்குத் தெரியாதே"

"அவனிடமிருந்து விஷயமறிந்திருப்பீர்கள் என்று நான் நினைத்திருந்தேன். அவன் உங்களை நேசிக்கவில்லை."

"என்மீது அவன் விரோதமும் குரோதமும் கொண்டிருக்கிறான் என்பது எனக்குத் தெரியும். அவனோடு பேசும் சந்தர்ப்பம் உனக்குக் கிடைத்ததா ?"

"நிறைய சந்தர்ப்பங்கள் வாய்த்தன. துணி துவைக்கும் சாலையில் இருந்தான். காவலர்கள் சிலருக்கு 'சோப்' போட்டு அவன் அங்கு விரும்பியதைச் செய்துவந்தான். உங்களை அவன் வெறுக்கிறான். அவனைக் காட்டிக்கொடுத்ததாக உங்கள்மீது குற்றம் சுமத்துகிறான்"

"அவன் ஒரு பொய்யன். எனது மோசமான எதிரிகளைக்கூட நான் காட்டிக்கொடுக்க மாட்டேன். அவனை அவனே காட்டிக்கொடுத்துக் கொண்டான்; குற்றவாளியைப் பிடித்து விட்டால் போலீஸார் பெருமிதம் கொள்கின்றனர். ஆனால், ஒவ்வொரு குற்றவாளியும் அவனது குற்றத்தைப் பறைசாற்றிக் கொள்கிறான்; இவ் விஷயத்தில், குற்றவாளிகள், பொதுவாக, புத்திசாலிகள் கிடையாது. கைவிரல் அடையாளங்களை மறைப்பதற்கு கையுறைகள் போட்டுக் கொள்கிறார்கள். ஆனால் பார்வையாளர் புத்தகத்தில் பெயர் பதிவு செய்வதுபோல தெளிவான அடிச்சுவடுகளை விட்டுச் செல்கின்றனர். கரீம் ஷரீபும் நானும் சேர்ந்து "கனீமா" என்னும் கப்பலைச் சூறையாடி ஒரு லட்சத்து இருபதினாயிரம் ரூபாய் பெற்றோம். எனது கடைசிச் செயல் அதுதான். தந்திரமாகத் தப்பித்துக்கொள்வது

சுலபமானதாகவே இருந்தது. ஆனல், கரீம் ஷரீப் கர்வம்கொண்டு, தனது தந்திர சாமார்த்தியங்களைப் பற்றி பெருமையடிக்கலானன்; குடிப் பழக்கத்தையும் மேற்கொண்டான். காணயமானவன் குடிப்ப தால் குடிமுழுகிப்போகாது. ஆனல், சீர்கெட்ட குற்றவாளி குடிக்கத் துவங்கினல் சிறைச்சாலைக்கு அவனே வழிதேடிக்கொள்கிருன்.

பேச்சை திடீரென நிறுத்திக் கொண்டு, சிப்கத்துல்லாவின் தோளைப்பற்றிக் குலுக்கினர்.

"சிப்கத்துல்லா! நீர் கவலைகொண்டிருக்கிறீரா?"

சிப்கத்துல்லா சிலை போல நின்ருர்.

"என்னவோ மாதிரியாக நிற்கிறீரே!"

போராட்டம் துவங்கவிருக்கிறது. சிப்கத்துல்லா அதற்கு ஆயத் தம் செய்து கொண்டார்.

"மரியமைப்பற்றி என்ன?"

"மரியமுக்கு மண ஏற்பாடு செய்யவேண்டியதாக விருந்தது அவள்மீது எனக்கிருக்கும் பாசம் நீர் அறிந்ததுதான். உம்மை நான் நேசித்தேன்; உம்மை மாப்பிள்ளையாகவும் தெரிந்தெடுத்தேன். ஆனல் நீர் சிறையில் தள்ளப்பட்டதும் எனது எண்ணமெல்லாம் தவிடு பொடியாகி விட்டது. முன்பே மணமுடித்திருந்தால் நீர் சிறை சென்றதும் சித்தம் கலங்கியிருப்பேன்; எனது மகள் மணவருத்த முற்றிருப்பதைக் காண சகியேன். 'சிறைகறை' படிந்த உம்மை மணளனை ஏற்றுக் கொண்டிருந்தால் அவளது நிலை என்னவாகி யிருக்கும். யோசித்துப்பாரும். இந்நிலையில் அம்மனிதன் வந்தான். நல்ல நாகரீக மனிதன்; அவன் கண்ணியமிக்கவனுகவும் கனவானுகவும் காணப்பட்டான். உண்மையை உரைக்குமிடத்து, அவனுக்கு துணை யும் தூண்டுகோலும் புரிந்தவன் நான்தான். நீர்கூட அவனை நேசிப்பீர். அவனைஎவருமே நேசிப்பர். அவள் அவனைக் காதலிக் கிருள்"

"அவனிடம் எனக்கு எள்ளளவு விரோதமும் கிடையாது; அவ் விதம் நான் குரோதம் கொண்டிருந்தால் அது அபத்தமானது, ஆனல், மரியமுக்கு மணமாகு முன்பு, நான் சொல்ல விரும் புவது........."

"மணமாகு முன்பா? பஷீர் சொல்லவில்லையா? இன்று காலை மரியமுக்கு மணம் நிறைவேறி விட்டது"

(தொடரும்.)

# இஹ்யா உலூமுத்தீன் மொழி பெயர்ப்பு

## புதிய இரண்டாம் பதிப்பு

(தமிழ்)

இஸ்லாமிய சன்மார்க்க ஞானப் பொக்கிஷமாய் விளங்குவது இம்மாமுல் மஃரிபத் வத்தரீகத் ஹஜ்ரத் இமாம் கஸ்ஸாலி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் அரபு பாஷையில் இயற்றிய இஹ்யா உலூமுத்தீன் என்னும் பாரதூரமான கிரந்தம். அது மௌலவி ஆலிம்களுக்கு மதரஸாக்களில் கற்பிக்கப் படுத்துவது யாவரும் அறிந்த விஷயம். அந்த அற்புதமும் மகிமையும் வாய்ந்த இஸ்லாமிய ஞானமார்க்க நூலின் மொழி பெயர்ப்பே இந்த இஹ்யா உலூமுத்தீன் ஆகும். அரபு உர்தூ தெரியாத தமிழ் முஸ்லிம்களும், இஸ்லாமிய அனுஷ்டானத்தத்துவ ஞானங்களையும், இக்கிதாபின் வாயிலாய் ஐயமறத் தெரிந்து கொள்ளலாம். இதில் ஷரீஅத், தரீகத், மஃரிபத், ஹகிகத் என்னும் நான்குவித மார்க்கங்களும் விளக்கப் பட்டிருக்கிறது. ஈமான், இஸ்லாம், அகீதா, ஹதீஸ், தலீல் முதலிய ஆதாரங்களோடு, இஸ்லாம் மதானுஷ்ட சட்ட திட்ட பர்லு, ஸுன்னத்து, முஸ்தஹப்பு, மக்ரூஹ், ஹராம் முதலிய மஸ்அலாக்க ளெல்லாம் இந்நூலின் கண், மிகத் துலாம்பரமாய் விளக்கப்பட்டிருக்கிறது. இதன் பெருமை எழுதிச் சொல்லித் தெரியக் கூடியதில்லை. இந்த நூலினைக் கையில் எடுத்துப் படித்துப் பார்த்தாலே தெரியவரும்.

நெடு நாட்களுக்குப் பிறகு இந்நூல் அச்சா யிருப்பதால் பிரதிகளுக்கு ஆடர் தர முந்திக் கொள்ளுங்கள்.

இதன் விலை ரூ. 5—0—0

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,

நெ 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ், 5.

# நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் குர்ஆனின் நல்லுபதேசமும்.

## (இரண்டாவது பாகம்)

### குவலயத்தோர்க்கு குர்ஆன் ஷரீப் கூறும் செய்தி.

### அத்தியாயம். 1

முஸ்லிம்களின் வேத கிரந்தமாக விளங்குவதும் இலக்கியத்தில் இணையற்ற நூலாகத் திகழ்வதுமான குர்ஆன் ஷரீப் இறைவனால் அருளப்பெற்ற தென்பதை இஸ்லாத்தின் எதிரிகளும் ஏற்றுக் கொள்கின்றனர். 'கரஅ' (அவன் தொனித்தான்) என்னும் மூலத்திலிருந்து குர்ஆன் பிறந்தது. அந்த மூல வார்த்தையின் சரியான பொருள் 'தொனித்தல் அல்லது தொனிக்கப்பட வேண்டியது' என்பது ஆகும். ஆயிரத்து நானூறு வருடங்களுக்கு முன்பு அல்லாஹ்வால் அவனியோர்க்கு அறிவுச்சுடர் அளிப்பதற்காக அண்ணல் அஹ்மது நபி (ஸல்) அவர்கள் வாயிலாக அருளப்பெற்ற அந்த வேத கிரந்தம் இன்று உலகில் ஐந்திலொரு பகுதியினரால் படிக்கப் பெறுகிறது. எனவே, குர்ஆன் ஷரீபைப்பற்றி எண்ணும் போது அதன் பெயர்ப் பொருத்தம் கவனிக்கத் தகுந்தது.

முதன் முதலில் அருளப்பெற்றது 96-வது அத்தியாயத்தின் முதல் ஐந்து வசனங்கள் ஆகும் என்பதை எல்லோரும் ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். 'இக்ரஃ' (ஓதுவீராக) என்று துவங்கும் அந்த வசனங்களின் பொருள் வருமாறு :—

"சிருஷ்டித்த உமது இறைவனின் பெயரால் (அவனது அனுமதி கொண்டு) ஓதுவீராக;

உதிரக்கட்டியினின்று (உங்களை) அவன் சிருஷ்டித்தான்;

நீர் ஓதுவீராக! உமது இறைவன் அருளாளன்;

மனிதனுக்கு எழுதுகோலின் உபயோகத்தைக் கற்றுக் கொடுத்தவன்;

மனிதனுக்கு அவன் அறியாததைப் போதித்தவன்"

இலக்கிய நயத்தைப் பொறுத்தவரை, இறைமறை கீழ்த்திசை நாடுகளிலே சிறந்த காவியமாகக் கருதப்படுகிறது. அரபு மொழியின் அர்த்த புஷ்டிக்கு அளவு கோலாக அது திகழ்ந்து வருகிறது.

187056

உன்னத உவமை, உபமானங்கள் நிறைந்த நிகரற்ற அறிவுப் பொக்கிஷமாக அது விளங்குகிறது. ஜெர்மன் அறிஞர் கெதே கூறுகிறார்: "முதலில் அதன் மந்தப் போக்கு வாசிப்போர்க்கு அருவருப்பு அளிப்பதாகவும், பின்னர் அதன் கருத்துக்கள் கவர்ச்சி தருவதாகவும், இறுதியில் அதன் அழகிய அமைப்புகள் பக்திப் பரவசமூட்டுவதாகவும் அமைந்த அருமறை குர்ஆன்"

முஸ்லிம் ஆசிரியரொருவர் சொல்கிறார்: "குர்ஆன் ஷரீபின் அற்புதம் அதன் அழகிய அமைப்பிலும், நயமான நடையிலும், வாக்கியங்களின் வளத்திலும் அடங்கி யிருக்கிறது. அதனை ஓதக் கேட்கும் ஒவ்வொருவனும் மற்ற எல்லா அரபு காவியங்களைவிட அதன் சிறப்புற்ற மேன்மையை உடனே உணர்ந்து கொள்கிறான். காவியத்தில் பொதிக்கப் பெற்றுள்ள அதன் ஒவ்வொரு வாக்கியமும் கம்பீரமானதாக, பிரகாசிக்கும் மாணிக்கம் போன்று இருக்கிறது; கண்கள் கூசும்படி செய்யுமளவு ஜெகஜ் ஜோதியான முத்துப் போன்று பிரகாசிக்கிறது. முதலில் வெளியிடப் பெற்றது முதல் இன்று வரை அறிஞர்கள் அனைவருக்கும் அதிசயம் அளிக்கும் வண்ணம் எவராலும் (அதைப் போன்று) இயற்ற முடியாத வகையில் அதன் நடை அமைந்துள்ளது."

அழியாத, அழகிய அற்புதமென பாவிக்கப்பெற்ற குர்ஆன் ஷரீபையே தமது நபித்துவத்துக்கு நல்ல அத்தாக்ஷியாக நபிகள் நாயகம் (ஸல்) எடுத்தியம்பி வந்தார்கள். நளினமான நடையிலும் பொருள் செறிவிலும் நிகரற்ற காவியங்களைப் புனைவதில் நேரம், நினைப்பு, உழைப்பு ஆகியவற்றைச் செலவிட்டு வந்த அக்கால அரேபிய அறிஞர்களை அண்ணல் நபி (ஸல்) அறைகூவி அழைத்தார்கள். இறைமறையின் ஒரு சிறு அத்தியாயத்துக்கு நிகரான சிறு காவியத்தைப் புனையுமாறு பகிரங்கமாக சவால் விடுத்தார்கள். அந்த அறைகூவல் இன்றுவரை எதிர்க்கப்பெறாமல் இருந்து வருகிறது. எழுத்து வாசனையறியாத எம்பெருமானார் (ஸல்) அவர்களின் கற்பனையிலிருந்து வெளிப்பட்ட காவியமாக இருந்திருக்குமாயின், தரணியில் தன்னிகரற்ற கிரந்தமாக குர்ஆன்ஷரீப் இருந்திருக்க முடியாது என்பது வெள்ளிடை மலை. அருமறை அல்லாஹ்வின் வார்த்தைதான்; நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சிருடிஷ்யல்ல என்பதை எடுத்துக்காட்ட இதைவிட வேறு என்ன அத்தாக்ஷி வேண்டும்.

ஏகனான இறைவன் மீது நம்பிக்கை கொள்ள வேண்டு மென்பதையும் அகிலங்கள் அனைத்துக்கும் அதிபதியான அவனது திருவுளச் சித்தத்துக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்பதையும் அவனது ஆக்ஞைகளுக்கேற்ப அமல் செய்ய வேண்டுமென்பதையும் குர்ஆன்ஷரீப் வலியுறுத்திக் கொண்டே யிருக்கிறது. தானதர்மங்கள்

தருவதில் தாராளப்போக்கு, இனிய சுபாவம், மதிமயக்கம் தரும் மதுபான வகைகளிலிருந்து விலகிக் கொள்ளுதல், சகிப்புத் தன்மை காட்டுதல் வேண்டுமெனவும் வற்புறுத்தப் படுகிறது. தினந்தோறும் ஐங்காலத் தொழுகை, வருடந்தோறும் ரமலான் மாதத்தில் நோன்பு, தான தர்மம், வாழ்க்கையி லொருதடவை ஹஜ்ஜு ஆகியவை அதன் போதனைகள். தொழுகை அவசியமும் அத்தியாவசியமும் ஆகும் என்பதை எடுத்துரைப்பதற்காக "மார்க்கத்தின் தூண்" எனவும், "சுவனலோகத்தின் திறவு கோல்" எனவும் தொழுகையை வள்ளல் நபி (ஸல்) வர்ணித்திருக்கிறார்கள். தொழுகைக்குமுன் நிபந்தனையாகச் சுத்தம்-உடல், உடை, தொழும் ஸ்தல சுத்தம் வற்புறுத்தப் பட்டுள்ளது.

குர்ஆன் ஷரீபின் போதனைகள், மார்க்க ஒழுக்க விதிகளோடு நின்று விடாமல், மனிதனின் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் வியாபிப்பதாக விருக்கிறது. பிரசித்திப்பெற்ற சரித்திராசிரியர் கிப்பன் சொல்கிறார்: "அட்லாண்டிக் முதல் கங்கை வரையில் மார்க்கத் துறையில் மட்டுமின்றி சிவில், கிரிமினல் துறைகளிலும் ஜீவாதார சட்ட தொகுப்பாக குர்ஆன் அங்கீகரிக்கப்படுகிறது; மனித வர்க்கத்தின் செயல்களையும் சொத்துக்களையும் கட்டுப்படுத்தி ஒழுங்கு படுத்தும் சட்டங்கள், இறைவனின் திருவுளச்சித்த மென்னும் அசைக்க முடியாத அங்கீகாரத்தின் மீது அமைந்துள்ளன. அல்லது, வேறு விதமாகச் சொல்ல வேண்டுமாயின், முஸ்லிம்களின் பொது சட்டதிட்டமாக குர்ஆன் ஷரீப் விளங்குகிறது. மார்க்க, சமூக, சிவில், கிரிமினல், நீதிபரிபாலன, வாணிபத் துறைகளைப் பற்றிய சட்டதிட்டங்களைக் கொண்ட அல் குர்ஆன் அவனியோரின் அன்றாட வாழ்க்கையைக் கட்டுப்படுத்தி ஒழுங்கு படுத்துவதாக விருக்கிறது. ஆன்மா சாந்திக்கான மார்க்கம் முதல் உடல் உரத்துக்கான வழிகள் வரை கூறுவதோடு ஒழுக்க நெறியின் சிறப்பையும் ஒழுங்கீனத்தின் சீர்கேட்டை எடுத்துக் கூறி இம்மையில் தண்டனையும் மறுமையில் வேதனையும் பற்றியும் விளக்குகிறது.

அரசியல் அரங்கிலே மதகுருக்களின் செல்வாக்கு அபாயகரமானது, ஆபத்து விளைவிக்க வல்லது என்பதையும் அவர்கள் அரசாங்கங்கள் அனைத்தையும் அலைக்கழிக்கும் தன்மை வாய்ந்தவர்கள் என்பதையும் உணர்ந்து கொண்டு, புரோகிதத்துக்கு இஸ்லாத்திலே இறை தூதர் (ஸல்) இடமளிக்கவில்லை. ஒவ்வொரு முஸ்லிமும் குர்ஆன் ஷரீபின் பிரதி யொன்று வைத்துக் கொண்டு, அதன் பொருளையும் போதனைகளையும் போற்றி யொழுக வேண்டு மென போதித்தார்கள். ரீனன் என்னும் அறிஞர் சொல்கிறார்: "மதத்தைப் பாதுகாப்பதாகப் பாசாங்கு செய்து திக்கு முக்காடச் செய்யும் புரோகிதத்துக்கு அவரை விட மிகச் சிறந்த எதிரி இருந்ததில்லை."

எனவே, இஸ்லாத்திலே புரோகிதம் கிடையாது. சட்டதிட்ட முணர்ந்த மேதைகளே மார்க்கப் பெரியார்கள். சட்டத் தொகுப்பு அல்குர்ஆன் அன்றோ? முஸ்லிம்கள் அனைவரும் சமமானவர்கள்; சகோதரர்கள்; அவர்களிலே சிறந்தவர்களும் திறமையானவர்களும் தொழுகையில் இமாமத் செய்வதற்கு இலாயக்கானவர்கள்.

சந்தேகத்துக்கும் சம்சயத்துக்கும் இடமளிக்காத இடமில்லாத இனிய மதமாக இஸ்லாம் இருக்கிறது. இறைவனின் ஏகத்துவத்துக்கு அல்குர்ஆன் அழியாச் சான்றாகும். விக்கிரகங்கள், விலங்குகள், மரங்கள், மனிதர்கள் ஆகியோரை வணங்குவது தகாது என்பது இஸ்லாத்தின் கண்டிப்பான கட்டளை. பிறப்பைத் தொடர்ந்து இறப்பும், உதயத்தைத் தொடர்ந்து அஸ்தமனமும் இருப்பது இயற்கையின் நியதி. எனவே, அழியுந் தன்மையுள்ள பொருள்களைப் போற்றி பூஜிப்பது மனிதனின் மான்புக்கு மாசு கற்பிக்கும் செயல் என்பது அல்குர்ஆனின் அருள்வாக்கு. உருவமும் உறைவிடமும் இல்லாத, பிறப்பும் இறப்பும் இல்லாத பிரசவமும் பிள்ளைப் பேறும் இல்லாத பரம்பொருளையே பாருலகினர் வணங்க வேண்டு மென்பது புர்கானின் பொன் மொழி. பாருலகினரின் பகிரங்கச் செயல்களையும் இதயத்திலேயுள்ள இரகசிய எண்ணங்களையும் முற்றிலும் உணர்ந்தோனாகிய ஏக இறைவனை வணங்க வேண்டு மென்ற கட்டளைக்குப் பகுத்தறிவே அடிப்படையாக அமைந்திருக்கிறது என்பதை எவரே மறுக்க வல்லார்? எல்லா வஸ்துக்களும் சிருஷ்டிக்கப் பெற்றவை; மனிதனின் தேவைக்கும் உபயோகத்துக்கு மென சிருஷ்டிக்கர்த்தாவால் அவை அமைக்கப் பெற்றுள்ளன. எனவே, அழியும் தன்மையுள்ள சிருஷ்டிப் பொருள்களை வணங்குவது இவ்வையத்தோர்க்கு இழுக்கு தரும் செயல் என இறை மறை இயம்புகிறது. அல்குர்ஆனின் அருள் வாக்குகள் தான் எல்லா கலைகளிலும் அரபுகள் அவனியில் சிறந்த மேதைகளாகத் திகழ்வதற்குத் துணையாக விருந்தன: நவநாகரீக வாழ்வுக்கு, விஞ்ஞான விருத்திக்கு, விக்கிரகத் தொழும்பர்களாக விருந்து விரும்பத்தகாத செயல்களி லீடுபட்டிருந்த அரபியர் விர்த்திப்பட்டார்க ளென்றால், அதற்குக்காரணம் அல்குர்ஆனின் அருள் வாக்குகள் தான். மத்திய காலத்திலே ஸ்பெயின், ஸிரியா, எகிப்து ஆகிய தேசங்களி லிருந்த முஸ்லிம் பல்கலைக் கழகங்களுக்கு பாருலகின் பல்வேறு பாகங்களிலு மிருந்து மாணவர்கள் வந்து பயின்றனர். கலைகளும் விஞ்ஞானமும் வியக்கத்தக்க வகையில் முன்னேற்றம் அடைந்து ஐரோப்பா, நவநாகரீக கண்டமாக மாறியதற்கு இம் முஸ்லிம் கல்வி நிலையங்களே மூல காரணம்.

(தொடரும்.)

(22-வது பகுதி)

# திருக் குர்ஆன் : : : :

# : : : : சார சங்கிரஹம்

பல விஷயங்கள் பற்றிய பல ஆயத்துகள்.

(ரஹ்மத் பாகவி)

## யூஸுஃப் நபி, அரசனின் பிரதம ஆலோசகரான வரலாறு-

(அக்காலத்தில் எகிப்தின் அரசனுன அஜீஸுஃம் புதிரான ஒரு கனவு கண்டான்.) அப்போது, அரசன் தன் (தர்பாரின்) பிரதானிகளை அழைத்துச் சொன்னதாவது :- "நான் கனவில் ஒரு விநோதம் கண்டேன். ஏழு கொழுத்த பசுக்கள், ஏழு மெலிந்த பசுக்களை (கடித்து)த் தின்று கொண்டிருந்தன. இன்னும் (பயிரில்) ஏழு கதிர்கள் பசுமையாக இருந்தன; மற்றும் ஏழு கதிர்கள் வாடி வதங்கிக் கிடந்தன. ஏ எனது அவைப் பிரதானிகளே! உங்களில் யாரேனும் இக்கனவின் பலனை (சரியானபடி பொருள்) கூறத் திறமை பெற்றவரா யிருந்தால், அவர் முன்வந்து என் கனவுக்குப் பொருள் (தஃபீர்) கூறுவாராக" என்று மன்னன் கட்டளையிட்டான். அதற்கு அந்தப் பேர்வழிகள், (உண்மை உணர்ந்து கூற ஆற்றலின்றி) "மன்னரே, இதெல்லாம் சித்தப் பிரமையினுலான எண்ணங்களாகும். இப்படிப்பட்ட சித்த விகார எண்ணங்களுக்கு பலன் (தஃபீர்) கூற எங்களுக்குத் தெரியாது" என்று கூறி யிருந்துவிட்டனர். (ஆனல், சில வருஷங்களுக்கு முன் சிறைச்சாலையில் யூஸுஃப் நபியிடம் கனவுகளுக்குப் பலன் கேட்டுணர்ந்த இரண்டு தோழர்களில்—அந்த முன்னறிவிப்பின் பிரகாரம் விடுதலைப் பெற்று) தப்பிப் பிழைத்த அவ்விரு வாலிபர்களில்—ஒருவனுன மது புகட்டுபவனுக்கு வெகு காலத்திற்குப் பிறகே யூஸுஃப் நபியின் ஞாபகம் வந்தது. அன்னவன் (அரசர் சமூகத்தில்) முன்வந்து "தயவு செய்து எனக்கு சிறிது நேரம் வெளியே (சிறையினுள்) சென்று வர அனுமதி கொடுங்கள். நான் (போய் வந்து) இந்த கனவுக்கு தஃபீர் கூறுகின்றேன் (என்று கேட்டுக் கொண்டான்; அதன் படியே அவனுக்கு அனுமதி கிடைத்தது. உடனே அவன், சிறைக்குட் சென்று, யூசுப் நபியைக் கண்டு விண்ணப்பிக்கலானுன்).

"ஏ (தோழரே) கனவுகட்கு உண்மையான பொருள் கூற வல்லமையுள்ள யூசுபே! இந்த (விசித்திர)க் கனவு விஷயமாகவும்

எங்களுக்குத் தாங்கள் தஃபீர் (பொருள்) கூற வேண்டும். (அதாவது) 'ஏழு கொழுத்த பசுக்கள் (ஒரு புறம்) இருக்கின்றன. அவை (மறுபுறமுள்ள) ஏழு மெலிந்த (வரட்டுப்) பசுக்களை கடித்துத் தின்று கொண்டிருக்கின்றன. இன்னும், ஏழு செழித்த நற்கதிர்கள் (ஒரு புறம்) இருக்கின்றன. (மற்றொரு புறம்) ஏழு காய்ந்த சருகுக் கதிர்களும் இருக்கின்றன. (இதற்கு தாங்கள்) பொருள் கூறினால் நான் தெரிந்து கொண்டு, நான் (சரியான பொருள் கூறுவதாக அரச சபையில் யாருக்கு வாக்குறுதி கொடுத்து வந்தேனோ) அந்த (ப் பெரிய) மனிதர்களிடம் திரும்பிச் செல்வேன். அவர்களிடம் (பொருள் கூறும்) இதே சந்தர்ப்பத்தில் (தங்களுடைய சீரழிவான நிலைமையைப் பற்றியும் சொல்வேன்). அவர்களும் விஷயம் தெரிந்து கொள்வார்கள்" என்று கேட்டுக் கொண்டான்.

அதற்கு யூசுப் நபி (தஃபீர்) சொன்னதாவது:—"(பிரஜைகளாகிய) நீங்கள் ஏழு வருஷ காலம் வரை நன்றாக தானியங்களை விளைவித்து அறுத்தெடுப்பீர்கள். அப்படி சேர்க்கும் தானியங்களை உதிர்த்து அப்படி. (களஞ்சியத்தில் போட்டு) சேமித்து வையுங்கள். (வெகு நாள் கெட்டுப் போகாமல் இருக்கும்). ஆயினும் (தேவைக்குத் தக்கபடி) கொஞ்சம் எடுத்து உங்கள் ஆகார விஷயங்களில் உபயோகப்படுத்திக் கொள்ளுங்கள். இதன் படி (மற்றும்) ஏழு வருஷங்கள் கடுமையான பஞ்சகாலம் வரும். இந்த பஞ்சகாலம் அந்த எஞ்சிய தானியங்களை யெல்லாம் ஆக்ரமித்து ஜீரணித்து விடும். நீங்கள் என் சொல்லைக் கேட்டு (தானியங்களைக்) காப்பாற்றி வைத்தால், (பஞ்ச காலத்தில் உங்களுக்கு உபயோகமாயிருக்கும்). இதல்லாமல் இன்னும் கொஞ்சம் தானியத்தை விசேஷமாக காப்பாற்றி வையுங்கள். அதன் பிறகு ஓர் ஆண்டு நல்ல (சுபிக்ஷ) காலமாக வரும். அச்சமயம் குடி ஜனங்கள் மழை மாரியினால் பெரும் நன்மை அடைவார்கள். திராக்ஷைப் பழ மாஹசூலும் அதிகரிக்கும்—(என்று யூசுப் நபி, அவனிடம் சொல்லியனுப்பினார்.)

(அரசருக்கு பானம் அளிக்கும் அந்த ஆள், கனவின் தஃபீராகிய இவ்விஷயங்களை, அரசர் சபையில் எடுத்துரைத்து, யூசுப் நபியின் வரலாற்றையும் நிலையையும் கூறி முறை யிட்டான்.) இதைக் கேள்வியுற்ற அரசன், (அதிகாரியை நோக்கி) "அந்த யூசுபை இப்போதே என் சமுகத்தில் ஆஜர் செய்யுங்கள்" என்று கட்டளை யிட்டான். எனவே, யூசுப் நபியிடம் அந்தத் தூது ஆள் (அரசர் அழைக்கிறார் என்ற நற்செய்தியை தெரிவிக்க) சிறைக்குள் பிரவேசித்த போது அவர் சொன்னதாவது:—"ஐயா, தாங்கள் அரசனிடம்

போய் (ஏ ராஜனே, யூசுபு என்ற வாலிபருக்கு விரோதமாய் சாக்ஷியம் சொல்லக் கருதி பிசகாய்) தங்கள் கைகளையே அறுத்துக் கொண்ட அந்தப் பெண்களின் நிலைமை யாதாயிற்று ?" என்று கேளுங்கள். (அந்தப்) பெண்களின் மோச சாகஸத்தினால் தான், நிரபராதியான நான், பலவந்தமாய் சிறையில் போடப்பட்டேன் (என்றும் சொல்லுங்கள்.) என்னுடைய இறைவன் அவர்களுடைய மோச தந்திரங்களை யெல்லாம் நன்கு அறிந்தே இருக்கிறார். (என்றும் சொல்லுங்கள்) என்பதாகும்.

(இவ்வாறே அந்தத் தூதுவன் செய்தி சொல்லவே) அரசர், (அந்தப் பெண்களை அழைத்து) கேட்டதாவது:—"ஏ பெண்களே, நீங்கள் யூசுப் மீது அபாண்டப் பழி போட்டீர்களே, அவர் விஷயமாய் நிகழ்ந்த உண்மை வரலாறு என்ன ?" என்று கேட்டார். அதற்கு அந்தப் பெண்கள் "ஐயோ, நாங்க ளொன்றும் அந்த வாலிபன் மீது தீங்கான காரிய மொன்றும் செய்யவில்லையே" என்று சொன்னார்கள். எகிப்து அதிபர் அஜீஸின் மனைவி (யான ஜுலைக்கா) அப்போது முன் வந்து "இப்போது உண்மையான இரகசியம் எல்லோருக்கும் வெளிப்படையாகி விட்டது. (இனி நானும் ஒப்புக் கொள்கிறேன்.) சுயமாக நானே, அவரிடம் இச்சையை பூர்த்தி செய்து கொள்வதற்காக, வலிய விழைந்தேன். (எனவே, யூசுப் சொன்ன தெல்லாம் முற்றும் வாஸ்தவமானதே. அவர் உண்மையே கூறுகிறார்.) அவர் சத்தியவான்களைச் சேர்ந்தவர்" என்று கூறினார்.

பிறகு (தூதுவன், நிகழ்ந்த விருத்தாந்தங்களை யெல்லாம் மீண்டும் யூசுபிடம் சொல்லி, வருத்தம் தெரிவித்தார். அதற்கு, யூசுப் மேலும் சொன்னதாவது :—"நான் ஏன் அப்போதே நிகழ்ந்த சம்பவத்தை சொல்லாமல் இருந்து விட்டேனெனின், இரகசியம் வெளியாகி (மானம் போய்) விடாதிருக்க வேண்டுமே என்று தான் 'பிறகு ஒரு காலம் வரும். அப்போது எகிப்து அதிபருக்கு விஷயம் விளங்கத்தான் போகிறது, என்று தான் நான் அவர் இல்லாத சமயத்தில் அவர் அமானத்தில் கியானத்து செய்யா திருந்தேன். மேலும் இறைவன் அமானத்தில் மோசம் செய்பவர்களை ஒருக்காலும் ஜெயமடையச் செய்வதில்லை. (பிறரைப் பற்றி நான் குறைகூற விரும்பவில்லை.) நான் என்னுடைய இச்சையையும் கட்டுப்படுத்த வைக்க முடியாதவன் தான். ஏனெனில் (நப்ஸு) இச்சையின் பக்கம் தான் மனிதனை இழுத்துச் சென்று தூண்டுகிறது. என்னுடைய இறைவன் என் மீது கிருபை புரியுங்கால் (நான் ஏன் அஞ்ச வேண்டும்?) சந்தேகமின்றி, என் இறைவன் (அல்லாஹ்) மிகவும் அன்புடையவனாகவும் அதிகம் மன்னிப்பவனாக வும் இருக்கின்றான்" என்பதாகும்.

பிறகு, (எகிப்து) மன்னர் "யூசுபை என் சமூகத்திற்கு (தர்பாரில்) அழைத்து வாருங்கள்; நான் அவரை என் சொந்தக் காரிய ஆலோசகராக வைத்துக் கொள்வேன்" என்றார். அவ்வாறே மன்னர் (யூஸுபை) அழைத்து அவரிடம் பேசி "இன்று முதல் நான் உம்மை அமீனக் ஆக்கிக் கொள்கிறேன்" என்ருர். அதற்கு யூசுப் (சம்மதித்து) "என்னை அரசாங்க பொக்கிஷதாராகச் செய்யுங்கள்; நன்ருக நிர்வகிப்பேன்" என்று சொன்னர். அவ்வாறே நியமிக்கப்பட்டார். இறைவனுகிய யாம் யூசுபுக்கு (எகிப்து) தேசத்தில் விசேஷ பதவியை அளித்தோம். இவ்வாறே நல்லோர்களின் கூலியை நாம் வியர்த்தன மாக்குவதில்லை. (ஸூரா: யூசுப்; ருகூ; 6, 7)


தமிழில் இதுகாறும் வெளிவராத

## முஸ்லிம் அத்வைத மூலமொழி

இது அரபி, பார்ஸி பாஷைகளி லிருந்து நெல்லிக் குப்பம் மௌல்வி முஹம்மது அப்துல் றஹ்மான் ஸாஹிபவர்கள் தமிழில் உரை படுத்தப்பட்ட அருமையான இஸ்லாமிய அத்துவைத நூல்.

இதில் இஸ்லாமிய மூல மந்திரமாகிய "லாஇலாஹ இல்லல்லாஹு" என்னும் கலிமாவின் பொருளை, உள்ளது உள்ளபடி விளக்கிக் காட்டி அல்லாஹு தஆலா சர்வமும் தாஞ யிருக்கிருன் என்ற சத்தியத்தை நிலை நாட்டி அதற்கு ஆதாரமாக ஆயத்துகளும் ஹதீதுகளுமாகிய சுருதிப் பிரமாணங்களையும் எடுத்துத் தீட்டி யிருக்கிருர். அத்துவைதமே தெரியாத சாமானிய படிப்பாளிகள் கூட இதை வாசிக்கத் தொடங்கினல் இதன் உண்மைதா னென்னவென்று தெரிந்து கொள்வர்.

இந்நூலுடன் "துஹ்பதுல் முர்ஸலா" என்கிற ஓர் அரிய அத்வைத நூலும், "இந்துமத வேதாந்தப் பகுதி" என்ற ஓர் நூலும் ஆக மூன்றும் சேர்த்து ஒரே பைண்டு செய்யப்பட்டிருக்கிறது. விலை ரூ. 1—12—0

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதரூஸ் 5.



Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

# ஜவாஹிறுல் பவாயித்

## ஆரும் பதிப்பு

இந்த புஸ்தகத்தில் 1-வது அல்லாஹு தஆலாவின் திருநாமங்களாகிய 'அஸ்மாஉல் ஹுஸ்னு' என்னும் அழகிய 99-இஸ்முகளும், ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே தர்ஜுமாக்களும் தக்ஸீறுகளும் காஸியத்துகளும், 2-வது 'அஸ்மாஉல் இலாம்' அதாவது நபிமார்கள் ஓதி வந்ததும் ஷருகை விட்டும் தனித்ததுமான 40 அஸ்மாக்களும், அவைகளில் வெளியாகும் அநேக கைபியத்து அஜாயிபு, முஃஜிஸாத்து, அஸ்றுறு முதலான மட்டில்லாத பிரயோஜனங்களும், 3-வது 'ஹயாத்துல் ஹைவான்' என்னும்உயிர் பிராணிகளாகிய சகல ஜந்துக்களும் ஒவ்வொன்றின் குணகுணங்களும், அவைகளின் அவயவமென்னும் அங்கங்களால் மனிதர்களுக்கு உண்டாகும் பற்பல வியாதிகளுக்கு அவிழ்தங்களும், இன்னும் ஹதீதுகளும், ஹிக்காயத்துகளும்; 4-வது மஞமூடைய தஃபீர் என்னும் கனவு நூலும், அதில் எவ்வண்ணமாய் கனவு கண்ட காக்ஷிகளுக்கும் விரிவாகிய தஃபீர்களும், அதற்கு அத்தாக்ஷியாகிய அநேக ஹிக்காயத்துகளும், 5-வது வைத்திய சுருக்கமென்னும் சகல வியாதிகளுக்கும் நுட்ப பரிகாரங்களும், இன்னும் அநேக பாயிதாக்களும் இருக்கின்றன. இவற்றில் அரபு இஸ்முகளை மாத்திரம் லெத்தோ கிராப்பில் அரபியிலும் மற்றவையெல்லாம் சுத்தத் தமிழாலும் அச்சிட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டது

இதன் விலை ரூ. 6

---

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

2C
9110

# மஹயிஹுல் அன்வார் பீ
# மதாயிஹுர் ரஸூல் வல் அப்ரார்.

இந்த கிதாபில், நமது நாட்டில் வழமையாய் ஓதி வருகிற ஷரீபுஹான மௌலிது, பர்ஸஞ்சி மௌலிது, ஹஸன் (ரலி) ஹுஸைன் (ரலி) மௌலிது, முஹியித்தீன் (ரலி) மௌலிது, ஷாஹுல் ஹமீது (ரலி) மௌலிது ஆக ஐந்து மௌலிதுகளும், யாஸைய்யிதி, யாகுத்பா, யாஸைய்யிதி ஷைகி, ஷபீஹுக பைத்து, கலாஸீ பைத்து, மழை பைத்து, பீஹுப்பி (ஸலவாத்து) பைத்து, கஸீதத்து ஹுஸைனிய்யா, அயாரப்பி பைத்து, ஜூத்பிலுத்பிக முனாஜாத்து, ஜிந்தா ஷாஹ் தூரிய்யா பைத்து, அபுல் ஹஸனிஷ் ஷாதிலீ (றஹ்) குத்பிய்யா, காஜா முயீனுத்தீன் (ரலி) பர்திய்யா, யாமன் யரா பைத்து, கல்வத்து நாயகம் பேரில் கஸீதா முதலியவையும் அடங்கியுள்ளன. இது பெரிய எழுத்தில்எழுதி, போட்டோ பிளாக் செய்து, கிளேஸ் காகிதத்தில் சுத்தமாய் அச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டது.

விலை ரூ. 6—0—0

பெற்றுக் கொள்ளுமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,

கெ. 20, ஹை ரோட், திருவல்லிக்கேணி, மதருஸ், 5.